விநோதினியை வீட்டைவிட்டு வெளியேற்றிவிடும்படி தன் தாயைத் தொந்தரை செய்யலானுன்.

''கிடக்கட்டும், சுனி! உன் 'மாயை' யுடன் பேச எனக்குப் பொழுது எங்கே இருக்கிறது? படிக்கும் வேளையில் டாக்டர் புத்தகம் இருக்கிறது. ஓய்வு வேளையில் நீ இருக்கிருய். இதன் நடுவே உன் தோழியை வேறு எப்படிப் பார்ப்பது?''

''சரி, உங்கள் படிப்புக்கு நான் குந்தகம் விளைவிக்க வில்லை. நான் என் பொழுதை அவளுக்கு விட்டுக் கொடுக்கி றேன்'', என்ருள் ஆசா.

''நீ கொடுக்கிறது, சரி. ஆனுல் நான் ஏன் விட்டுக் கொடுக்க வேண்டும்?''

ஆசா, விநோதினியின்மேல் அன்பாக இருக்கலாம். ஆனுல் அதனுல் அவளுக்குக் கணவன் மேலுள்ள அன்பு குறைந்து விடுகிறது என்பான் மகேந்திரன். அவன் ரோஷத்துடன், ''என்னைப்போல வேறு எவரையும் கண்ணெடுத்துப் பாராத அன்பல்ல உன்னுடையது'' என்பான். அதை ஆசா ஒப்புக் கொள்ள மாட்டாள். இதற்காகச் சண்டையிடுவாள். அழவும் அழுவாள். ஆனுல் வாய்ப் போரில் வெல்ல அவளால் முடியாது.

தங்கள் இருவருக்கும் இடையே ஊசியளவு இடமும் தான் விநோதினிக்கு அளிக்க விரும்பவில்லை என்று மகேந் திரன் பெருமைப்பட்டுக்கொள்ளுவான். இது ஆசாவுக்குப் பொறுக்காது. ஆனுல் அன்று அவள் தோல்வியை ஒப்புக் கொண்டாள். ''நல்லது, எனக்காகவாவது என் தோழியுடன் நீங்கள் பேச வேண்டும்'' என்ருள்.

ஆசாவிடம் தன் காதலின் உறுதியையும், மேன்மையை யும் காட்டிய பின்னர், விநோதினியைப் பார்க்கவும், பேசவும் ஒப்புக்கொண்டான் மகேந்திரன். ''இதோ, இதுதான் சாக்கு என்று அடிக்கடி தொந்தரை செய்தாயோ, நான் பிழைக்க மாட்டேன்'' என்று எச்சரிக்கையும் செய்தான்.

மறு நாள் விடியலில் விநோதினியின் படுக்கைக்கே சென்று அவளைத் தழுவிக்கொண்டாள் ஆசா. ''இதென்னடி, ஆச்சரிய மாக இருக்கிறதே! சகோரம் சந்திரனைவிட்டு மேகத்திடம் அல்லவா வந்திருக்கிறது!'' என்ருள் விநோதினி.

''உன் கவித்துவம் எல்லாம் எனக்கு வராது. ஏன் மூங்கில் காட்டில் முத்தை இறைக்கிருய்! உனக்கு ஏற்ற பதில் சொல்லக்கூடியவரிடம் போய் இதையெல்லாம் பேசேன்.''

''அவ்வளவு ரசிகர் யாரடி?

''உன் மைத்துனர் - என் புருஷர்தாம்; கேலியல்ல. உன்னுடன் பேச வேண்டுமென்று அவர் என்னைத் துளைத் தெடுக்கிருர்.''

'ஓ! பெண்டாட்டியின் உத்தரவுக்காக என்னைக் கூப்பிடு கிருனே! உடனே ஓடிவிட நான் ஒன்றும் இலேசானவள் இல்லை' என்று எண்ணிக்கொண்டாள் விநோதினி.

விநோதினி எதற்கும் ஒப்புக்கொள்ளவில்லை. ஆசா தன் கணவன்முன் அசடு வழிய நிற்கவேண்டி வந்தது.

மகேந்திரனுக்கு உள்ளூறக் கோபம். தன் எதிரே வருவதற்குத் தடையா! தன்னையும் மற்ற ஆண்களைப்போல் எண்ணுவதா! வேறு யாராகவேனும் இருந்தால் இதற்குள் பல வழிகளில் முயன்று விநோதினியை நேரில் கண்டு, பேசியிருக்க மாட்டார்களா! மகேந்திரன் இது விஷயமாக எதுவும் செய்யாததே அவனைப்பற்றி உயர்வாகக் கருதவேண்டிய விஷயமாயிற்றே! சற்று யோசித்தால், மற்றவர்களுக்கும் மகேந்திரனுக்கும் இருக்கும் வேற்றுமை தெரியுமோ விநோதினிக்கு!

விநோதினியும் உள்ளத்தில் கோபம் பொங்க ஒரு தீர்மானத்துக்கு வந்திருந்தாள். 'இத்தனை நாட்களாக வீட்டில் இருக்கிறேன்; மகேந்திரன் ஒருதடவை கூட என்னைப் பார்க்க வரவில்லை. அத்தையின் அறையில் இருக்கும்போது கூட எந்தச் சாக்கிட்டும் அந்த அறைப்பக்கமே முகம் காட்டுவதில்லை. எதற்கு இவ்வளவு அலட்சியம்! நான் என்ன அஃறிணைப் பொருளா! மனித ஜன்மம் இல்லையா நான்! பெண்தானே நான்! ஒரு முறை என்னுடன் அறிமுகம் ஆகட்டும். எனக்கும் அந்தச் செல்லக் கிளி சுனிக்கும் உள்ள வேற்றுமை நன்ருகப் புரிந்துவிடாதா?'

ஆசா புருஷனிடம் தன் புது ஏற்பாட்டைச் சொன்னுள்: ''நீங்கள் காலேஜுக்குப் போய்விட்டதாகச் சொல்லி அவளை நம் அறைக்கு அழைத்து வருகிறேன். பின்னர் வெளியிலிருந்து திடீரென்று வந்துவிடுங்கள். அப்புறம் அவள் தன்னுல் அடங்க வேண்டியதுதானே!''

''அவளுக்கு இவ்வளவு கடுமையான தண்டனை அளிக்கும்படி அவள் என்ன தவறு செய்தாள்?''

''இல்லை. அவள்மேல் எனக்கு உண்மையாகவே கோபம். உங்களைப் பார்க்கக்கூட வெறுப்பா! அவள் சபதத்தை முறித்துவிட்டுத்தான் மறு வேலை.''

''உன் உயிர்த் தோழியின் முகம் பாராமல் நான் ஒன்றும் சாகவில்லையே! அப்படித் திருட்டுத்தனமாகப் பார்க்க எனக்கு விருப்பமில்லை!''

ஆசா கெஞ்சும் பாவனையில் மகேந்திரனுடைய கைகளைப் பிடித்துக்கொண்டாள். ''ஒரே ஒரு தடவை எனக்காக நீங்கள் இதைச் செய்யத்தான் வேண்டும். ஒரு முறையாவது

அவளுடைய பிடிவாதத்தை முறிக்கவேண்டும். அப்புறம் உங்கள் விருப்பம்போலச் செய்துகொள்ளுங்கள்.''

மகேந்திரன் பதில் கூறவில்லை. ''என் கண்ணல்லவா! நான் சொல்வதைக் கேளுங்கள்'' என்ருள் ஆசா.

மகேந்திரனுடைய ஆவலும் அதிகரித்தது. ஆகவே, முதலில் அலட்சியம் காட்டிப் பின்பு ஒருவாறு இணங்கினுன்.

இலையுதிர் காலத்தின் ஒலி அடங்கிய பிற்பகல் விநோதினி மகேந்திரனுடைய அறையில் தனிமையில் ஆசாவுக்குக் கம்பளிச் சட்டை பின்னக் கற்றுக் கொடுத்தவாறு உட்கார்ந்திருந்தாள். ஆசாவின் கவனம் கதவின் பக்கமாகவே இருந்தது. அதனுல் அவளுக்குப் பின்னல் எண்ணிக்கையெல்லாம் தவறுதலாகவே வந்தன. விநோதினியிடம் அவள் திறமையின்மையை எடுத்துக் காட்டவேண்டியதாயிற்று.

கடைசியில் விநோதினிக்கே வெறுத்துப் போய்விட்டது. அவள் ஆசாவின் கையிலிருந்து பின்னிய நூலைப் பிடுங்கிக் கீழே எறிந்தாள். ''உனக்கு வராது. எனக்கு வேலை இருக்கிறது. நான் போகிறேன்'' என்ருள்.

''இன்னும் கொஞ்சம் இரேன். இனிமேல் பாரேன். தப்பே வராது'' என்று ஆசா மீண்டும் ஊசி, நூலை எடுத்துக் கொண்டாள்.

இதற்குள் மகேந்திரன் விநோதினியின் பின்னுல் ஓசைப் படாமல் கதவருகே வந்து நின்ருன். ஆசா பின்னுவதை விட்டுத் தலை நிமிராமல் மெல்லச் சிரித்துக்கொண்டாள்.

''என்னடியம்மா! திடீரென்று என்ன சிரிப்பு!'' என்ருள் விநோதினி. ஆசாவினுல் அதற்குமேல் அடக்கிக்கொள்ள முடியவில்லை. ஊசி, நூலை அவள் விநோதினியின்மேல் போட்டுவிட்டு, ''நிச்சயமாக இது எனக்கு வராதடி!'' என்ருள். பிறகு அவள் விநோதினியின் கழுத்தைக் கட்டிக்கொண்டு உரக்கச் சிரித்தாள்.

முதலிலிருந்தே விநோதினிக்கு எல்லாம் தெரியும். ஆசாவின் பரபரப்பும், பாவனைகளுமே அவளுக்கு எதையும் மறைக்காமல் காட்டிக் கொடுத்தன. மகேந்திரன் பின்புறம் வந்து நிற்பதும் அவளுக்கு நன்ருகத் தெரிந்ததுதான். ஒன்றும் தெரியாதவளைப்போல் வேண்டுமென்றே அவள் ஆசாவின் மிக எளிய சூழ்ச்சி வலையினுள் சிக்கிக்கொண்டாள்.

மகேந்திரன் உள்ளே நுழைந்தான். ''உங்கள் சிரிப்புக்குக் காரணம் என்ன! அடியேனும் அதை அறியலாமா?'' என்ருன்.

விநோதினி திடுக்கிட்டவள்போல் எழுந்து தலையில் முக்காட்டை இழுத்துவிட்டுக்கொள்ள முயன்ருள். ஆசா அவளுடைய கைகளை விடவில்லை.

மகேந்திரன் சிரித்தான். ''நீங்கள் உட்காருங்கள், நான் போகிறேன்: இல்லையென்றால் நீங்களும் உட்காருங்கள். நானும் உட்காருகிறேன்.''

விநோதினி சாதாரணப் பெண்களைப்போல ஆசாவின் கைகளை உதறி விடுவித்துக்கொள்ளவோ, சச்சரவும் குழப்பமும் கிளப்பித் தன் வெட்கத்தைக் காட்டிக்கொள்ளவோ இல்லை. சாதாரணமான குரலிலேயே அவள், ''நீங்கள் சொல்கிறீர்களே என்றுதான் உட்காருகிறேன்; அப்புறம் சாபம் இடாதீர்கள்!'' என்றாள்.

''உங்களுக்கு நகரும் சக்தியே நீண்ட காலம் இராமல் போகட்டும் என்று சாபம் தரலாமா?''

''அதற்கு நான் அஞ்சவில்லை. ஏனென்றால், உங்களுக்கு நீண்ட காலம் என்பது அதிக நேரம் ஆகாது. பொழுதும் கழிந்துவிட்டது என்றே தோன்றுகிறது.''

விநோதினி மீண்டும் எழுந்திருந்தாள். ஆசா மீண்டும் அவளைத் தடுத்தாள். ''என் தலையைத் தின்றாற்போல்! இன்னும் கொஞ்ச நேரம் இரேன்.'' என்றாள்.

14

''என் தோழியைப்பற்றி உங்களுக்கு என்ன தோன்றுகிறது? உண்மையாகச் சொல்லுங்கள்'' என்றாள் ஆசா.

''அப்படி மோசம் இல்லை''.

ஆசாவுக்குக் கோபம் வந்தது. ''உங்களுக்கு எவரைக் கண்டாலும் ஆவதே இல்லை'' என்றாள்.

''ஒருத்தரைத் தவிர.''

''இன்னும் சற்று நன்றாக அறிமுகம் ஆகட்டும். அப்போது தெரியும், பிடிக்கிறதா இல்லையா என்று!''

''இன்னும் அறிமுகமா? இனிமேல் இப்படியேதான் நடக்குமா?''

''மரியாதைக்காகவாவது மனிதர்களுடன் பேச வேண்டாமா! ஒரு நாள் அறிமுகமானபின் பார்ப்பதையே நிறுத்திவிட்டால், அவள்தான் என்ன நினைத்துக்கொள்ளுவாள்? உங்கள் போக்கே விசித்திரமாக இருக்கிறது. வேறு யாராக வேனும் இருந்தால் அந்த மாதிரிப் பெண்ணுடன் பேசப் போட்டியிட்டுக்கொண்டு முன் வருவார்கள். உங்களுக்கு இது பெரிய விபத்தாகப் படுகிறது.''

மற்றவர்களுடன் தன்னை ஒப்பு நோக்குவது மகேந்திர னுக்குக் களிப்பூட்டியது. ''சரிதான்; நீ கவலைப்படாதே! நான் ஓட இடம் ஏது? உன் தோழியும் ஓடிவிடப் போகிறதில்லை. போகப் போகப் பார்த்துக்கொள்ளலாம். உன் மரியாதைக்குப் பங்கம் ஏற்படாதபடி பார்த்துக்கொள்வேன். அவ்வளவு அறிவு உன் புருஷனுக்கு உண்டு!'' என்றான் அவன்.

விநோதினி இனிமேல் அடிக்கடி ஏதாவது சாக்கிட்டு எதிரே வருவாள் என்று மகேந்திரன் நினைத்தான். ஆனால் அவன் எண்ணியது தவறாகவே முடிந்தது. விநோதினி அவன் இருக்கும் பக்கங்கூடச் செல்வதில்லை. போகும் வழியில் அவளைத் தற்செயலாகப் பார்க்கக்கூட முடியவில்லை.

தன்னுடைய மனத்தின் தீவிர ஆவல் வெளியாகிவிடப் போகிறதே என்று அஞ்சி மகேந்திரன் விநோதினியைப்பற்றி ஆசாவிடம் ஒன்றும் கேட்கவில்லை. நடுநடுவே விநோதினி யுடன் பழகும் சாதாரணமான விருப்பத்தைக்கூட இரகசிய மாக அடக்கப் போய், அவன் உள்ளத்தின் தீவிரம் பின்னும் மிகுதியாகியது; அதிலும், விநோதினியின் அலட்சியம் அவனுக் குப் பின்னும் ரோஷத்தை மூட்டியது.

விநோதினியைச் சந்தித்த மறு நாள் மகேந்திரன் பேச் சோடு பேச்சாகக் கேலிச் சிரிப்புடன், ''உன் தோழிக்கு இந்தத் தகுதியற்ற கணவனைப்பற்றி என்ன தோன்றுகிறதாம்?'' என்று கேட்டான்.

கேட்பதற்கு முன்பே இது விஷயமாக உணர்ச்சி ததும்பும் விவரமான குறிப்பு ஆசாவின் மூலம் கிடைக்கும் என்று மகேந் திரன் உறுதியாக எதிர்பார்த்திருந்தான். ஆனால் காத்திருந்து பயன் ஒன்றுமில்லை. ஆகவே, விளையாட்டாகப் பேச்செடுக்க வேண்டியதாயிற்று.

ஆசா சங்கடத்தில் ஆழ்ந்தாள். தோழியோ ஒன்றுமே சொல்லவில்லை. அதனால் ஆசாவுக்கு விநோதினியின்மேல் கசப்பு மூண்டது.

''சற்றுப் பொறுங்கள். நாலைந்து நாள் பழகட்டும். அப்புறந்தானே சொல்ல முடியும்? நேற்று எவ்வளவு நேரம் பார்த்தது!....பேசத்தான் பேசினீர்களா!'' என்றாள் ஆசா.

இந்தப் பதிலைக் கேட்டு மகேந்திரன் சற்று ஏமாற்றம் அடைந்தான். விநோதினியின் விஷயத்தில் அவனால் கம்மென் றிருக்கவும் முடியவில்லை.

இந்த ஆலோசனைகளினிடையே விஹாரி வந்து சேர்ந் தான். ''என்ன, மகேன் அண்ணா! எதைப்பற்றி வாதம் இன்று!'' என்றான் அவன்.

''இதோ பாரப்பா! குமுதினியோ, பிரமோதினியோ

யாருடனே உன் மதனி ஏதோ உறவு பிடித்துக்கொண்டிருக்கிருளாம். அது போகட்டும். அதற்காக அவள் தோழியுடன் நானுங்கூட உறவு பிடித்துக்கொள்ள வேண்டுமாம்! எப்படி இருக்கிறது?'' என்ருன் மகேந்திரன்.

முக்காட்டினுள் ஆசா, ஆத்திரத்துடன் முணுமுணுத்தாள். விஹாரி கணநேரம் ஒன்றும் பேசாமல் மகேந்திரனுடைய முகத்தை நோக்கிப் புன்னகை செய்தான். பிறகு, ''மன்னி! போகிற போக்கைக் கவனித்தால் அறிகுறி நல்லதாகப் படவில்லையே! இதெல்லாம் மறைக்கிற பேச்சு! உன் தோழி - அந்த 'மாயாவினி'யை நான் பார்த்திருக்கிறேன். அடிக்கடி அவள் தரிசனம் கிடைத்தால் அதை ஒரு விபத்தென்று நான் கருதமாட்டேன். இவ்வளவுமட்டும் என்னுல் திடமாகச் சொல்ல முடியும். ஆனுல் மகேன் அண்ணு இப்படி மாறுவது என்ருல், இது சந்தேகமாகத்தான் இருக்கிறது'' என்ருன்.

மகேந்திரனுக்கும் விஹாரிக்குமிடையே இன்னும் ஒரு வித்தியாசத்தை ஆசா உணர்ந்தாள்.

திடீரென்று மகேந்திரனுக்குப் போட்டோக் கலைப் பித்துப் பிடித்துக்கொண்டது. முன்பு ஒரு முறை போட்டோக் கலை கற்கத் தொடங்கியவன் அதை விட்டுவிட்டான். இப்போது மீண்டும் காமிராவைப் பயன்படுத்தி, 'பிலிம்' சுருள் வாங்கிப் படம் எடுக்கத் தொடங்கினுன். வீட்டு வேலையாட்கள் வரையில் எல்லோரையும் அவன் படம் எடுத்தான்.

ஆசா அவனிடம், ''என் தோழியையும் போட்டோ பிடியுங்கள்'' என்ருள்.

மகேந்திரன் சுருக்கமாக, ''சரி'' என்ருன்.

தோழியோ பின்னும் சுருக்கமாக, ''வேண்டாம்'' என்ருள்.

ஆசா மீண்டும் சூழ்ச்சி புரிய வேண்டியதாயிற்று. அந்தச் சூழ்ச்சியும் விநோதினிக்குத் தெரியாமல் இல்லை. பிற்பகலில் ஆசா அவளைத் தன் படுக்கை அறைக்கு அழைத்து வந்து எப்படியாவது தூங்கச் செய்வது, மகேந்திரன் அந்த நிலையில் அவளைப் படம் பிடித்து, அதன் மூலம் அவளுடைய செருக்கை அடக்குவது என்றும் தீர்மானமாயிற்று.

விநோதினி பிற்பகலில் என்றைக்கும் தூங்கியதில்லை. ஆனுல், ஆசாவின் அறைக்குள் வந்ததுமே அன்று அவளுடைய விழிகள் உறக்கத்தால் செருகிக்கொண்டன. மேலே ஒரு சிவப்புச் சால்வையைப் போர்த்துத் திறந்த சாளரத்தின் பக்கம் பார்த்தவாறு தலையணைபோல் கை வைத்துக்கொண்டு அவள் படுத்திருந்தாள். அதைக் கண்ட மகேந்திரன்,

''போட்டோவுக்கென்றே தயாராகப் படுத்திருக்கிறாப்போல் இருக்கிறது'' என்றான்.

மகேந்திரன் ஓசைப்படாமல் அடிமேல அடி வைத்துக காமிராவைக் கொணர்ந்தான். எந்தப் பக்கத்திலிருந்து எடுத்தால் நன்கு அமையும் என்று நிச்சயிக்க அவன் நெடுநேரம் பல பக்கங்களிலிருந்து விநோதினியைப் பார்க்க வேண்டியிருந்தது. கலைஞன் அல்லவா? வெகு கவனமாகத் தலையின் அருகே பரந்த கூந்தலை ஓரிடத்தில் சற்று விலக்கவும் வேண்டி வந்தது: பிறகு அது பிடிக்காமல் திருத்தவும் திருத்தினான். ''காலருகில் கம்பளியைச் சற்று இடது பக்கம் நகர்த்து'' என்று ஆசாவிடம் காதோடு காதாகச் சொன்னான்.

ஆசா திறமையற்றவள். ''எனக்குச் சரியாக வராது. எழுப்பிவிடுவேன். நீங்களே நகர்த்திவிடுங்கள்'' என்றாள் அவள். மகேந்திரனே போர்வையை நகர்த்தினான்.

கடைசியில் போட்டோ எடுக்கப் பிலிமை அதனுள் போட்டதுமே, ஏதோ ஓசை கேட்டதுபோல் விநோதினி கொட்டாவி விட்டவாறு பரபரவென்று எழுந்து உட்கார்ந்தாள். ஆசா உரக்கச் சிரிக்கலானாள். விநோதினிக்குக் கோபம் வந்தது. ஒளி வீசும் அவள் விழிகள் மகேந்திரனின் மேல் பாய்ந்தன. ''மிகவும் அநியாயம் இது!'' என்றாள்.

''நீங்கள் சொல்வதில் சந்தேகம் இல்லை. இது நியாயம் இல்லைதான். ஆனால் திருடியபின் திருடின சொத்துக் கிடைக்காமல் போனால், இரண்டு விதத்திலும் எனக்குப் பயன் இராமல் போகுமே! முதலில் நான் தொடங்கிய அநியாயத்தைப் பூர்த்தி செய்துவிடுகிறேன். பிறகு தண்டனை கொடுங்கள்'' என்றான் மகேந்திரன்.

ஆசாவும் விநோதினியை விடவில்லை. படம் எடுத்தாயிற்று. ஆனால் முதல் படம் கெட்டுப் போயிற்று. ஆகவே, மறு நாள் இன்னொரு படம் எடுக்காமல் விடவில்லை கலைஞன். பிறகு தோழியர் இருவரும் ஒன்றாகத் தோழமையின் நெடுநாள் சின்னமாகப் படம் எடுத்துக்கொள்ளும் பேச்சு எழுந்தது. விநோதினியால் அதை மறுக்க முடியவில்லை. ''ஆனால், இதுதான் கடைசிப் படம்'' என்று எச்சரிக்கை செய்தாள். இதைக் கேட்ட மகேந்திரன் அந்தப் படத்தைக் கெடுக்க அடித்தான். இப்படிப் படம் எடுப்பதிலேயே அவர்களுடைய அறிமுகம் வளர்ந்தது.

15

வெளியிலிருந்து தூண்டிஞல், நீறு பூத்த நெருப்பு மீண்டும் எரிகிறதல்லவா? இளங் காதலர்களின் இன்பக் களிப்புச் சற்று மங்கியிருந்தது; இப்போது மூன்றும் ஆளின் வரவிஞல் அது மீண்டும் கொழுந்துவிட்டது.

மணமான சில நாட்களுக்குள்ளாகவே ஆசா, மகேந்திரன், இருவருமே தங்கள் அன்பையெல்லாம் கொட்டித் தீர்த்துவிட இருந்தார்கள். காதல் இசை ஒரேயடியாக மந்தர ஸ்தாயி நிஷாதத்திலேயே தொடங்கியது. வட்டியைக் கொண்டு சாப்பிடாமல், அசலேயே அவர்கள் அழிக்க முற்பட்டனர். இந்த வெறி வெள்ளத்தை, அன்ருட உலகுக்கு ஏற்ற சாதாரணப் பெருக்காக மாற்றுவது எப்படி! மயக்கம் தெளிந்ததும் ஏற்படும் சோர்வை மாற்ற ஒருவிதத் தூண்டுதல் அவசியம். அந்தத் தூண்டுதலைத் தோற்றுவிப்பது எங்ஙனமென்று ஆசாவுக்குத் தெரியாது. இந்தச் சமயத்திலேதான் விநோதினி புதுவிதமான, விசித்திரமான கலயத்தில் ஒருவித மருந்தைக் கொணர்ந்து ஆசாவிடம் அளித்தாள். கணவனுடைய முக மலர்ச்சியைக் கண்டு ஆசாவுக்கும் மன ஆறுதல் ஏற்பட்டது.

இனி, அவளுடைய முயற்சி எதுவும் தேவையில்லை. மகேந்திரனும் விநோதினியும் கேலியாகப் பேசும்போது அவளும் மனம் விட்டுச் சிரிப்பில் கலந்துகொள்ளுவாள். சீட்டாட்டத்தில் மகேந்திரன் ஆசாவை ஏமாற்றுவான். அவள் விநோதினியை நீதிபதியாக எண்ணி அவன்மேல் குற்றப் பத்திரிகை படிப்பாள். மகேந்திரன் அவளைக் கேலி செய்தாலோ, ஏதாவது சொல்லத் தகாதவற்றைச் சொன்ஞலோ விநோதினி அவளுக்காகப் பரிந்து ஏதாவது பதில் சொல்வாள். இவ்வாருக அந்த மூவருடைய வம்புக் கச்சேரி வளர்ந்தது.

இதஞல் எல்லாம் விநோதினியின் வேலையில் சற்றும் குறைபாடு நேரவில்லை. சமையல் வேலை, மற்றும் வீட்டு வேலைகள், ராஜலட்சுமிக்குத் தொண்டு புரிவது எல்லாவற்றையும் குறைவற முடித்த பின்புதான் அவள் பொழுதுபோக்க வருவது வழக்கம். மகேந்திரன் பரபரப்புடன், ''வேலைக்காரர்களை வேலை செய்ய விடாமல் நீ நாசமடிக்கிருய்'' என்பான். ''வேலை செய்யாமல் நான் கெட்டுப் போவதைவிட இது எவ்வளவோ மேல். நீங்கள் காலேஜுக்குப் போங்கள்'' என்று பதில் அளிப்பாள் விநோதினி.

''இன்று மழையாக இருக்கிறது..''

"அதெல்லாம் கூடாது. உங்களுக்கு வண்டி தயாராக இருக்கிறது. காலேஜுக்குப் போகத்தான் வேண்டும்."

"வண்டி வேண்டாமென்று நான் சொல்லிவிட்டேனே!"

"நான் வண்டிக்குச் சொல்லியிருக்கிறேன்" என்று விநோதினி, மகேந்திரன் காலேஜுக்காக அணியும் உடைகளைக் கொணர்ந்து கொடுத்தாள்.

"நீ ராஜபுத்திர வம்சத்தில் பிறந்திருக்க வேண்டியவள்: சண்டை வந்தால் உறவினனுக்குக் கவசம் அணிவிக்கலாம்."

பொழுது போக்குவதற்காக ரஜா எடுத்துக்கொள்வதற்கோ, படிக்காமல் இருப்பதற்கோ விநோதினி இடங்கொடுக்க மாட்டாள். அவளுடைய கடுமையான உத்தரவின் பேரில் பகலில்கூட நிறுத்தாமல் வம்படிப்பது ஒரேயடியாக நின்றது. அந்திப்பொழுதின் ஓய்வு நேரம் மகேந்திரனுக்கு மிகவும் இனிமையாகத் தோன்றியது. அந்தி நேரம் வராதா என்று ஆவலுடன் இருப்பான் அவன். பகல் நேரம் எப்போது கழியும் என்று காத்திருக்கத் தொடங்கினான் மகேந்திரன்.

முன்பெல்லாம் நடுநடுவே, வேளைக்கு உணவு தயாராகாது. அதைச் சாக்கிட்டு அவன் காலேஜுக்கு மட்டம் போடுவான். விநோதினி எல்லாம் ஒழுங்காக நடக்க ஏற்பாடு செய்தாள்: அதன்படி மகேந்திரனுக்குச் சீக்கிரமாகவே உணவு தயாராகிவிடும். உணவு கொண்டதுமே வண்டியும் காத்திருக்கும். உடைகள் இவ்வாறு மடித்து ஒழுங்காகக் கிடைப்பது முன்பெல்லாம் அரிது. அவை சலவையிலிருந்து வந்தனவா அல்லது அலமாரியின் மூலையில் எங்காவது கண் காணாமல் கிடக்கின்றனவா என்பதுகூட நாளெல்லாம் தேடிய பிறகுதான் தெரியவரும்.

கந்தறகூளமாக இப்படி ஆசா எல்லாவற்றையும் கவனிக்காமல் விட்டிருப்பதைப் பார்த்து விநோதினி மகேந்திரனுடைய எதிரிலேயே சிரிப்புடன் கண்டிப்பாள். மகேந்திரனும், ஆசா இவ்வாறு திறமையும் ஒழுங்கும் அற்று இருப்பது கண்டு சற்றுப் பரிவுடன் நகைப்பான். கடைசியில், தோழியின் சார்பாக விநோதினி ஆசாவிடமிருந்து தானே அவளுடைய வேலைப் பொறுப்பையெல்லாம் ஏற்றுக்கொண்டாள். வீட்டுக்குள் ஒழுங்கு நிலவியது. சட்டைப் பித்தான் பிய்ந்துவிட்டிருக்கும்: ஆசா சட்டென்று அதற்கு ஒன்றும் செய்யமாட்டாள். விநோதினி பரபரவென்று வந்து ஆசாவின் கையிலிருந்து சட்டையைப் பிடுங்கிப் பித்தானைத் தைத்துக் கொடுப்பாள். ஒரு நாள் மகேந்திரனுக்காக வைத்திருந்த உணவில் பூனை வாய் வைத்துவிட்டது. ஆசாவுக்கு ஒன்றுமே தோன்றவில்லை: விநோதினி பரபரவென்று சமையல் அறைக்

குள் போய் அகப்பட்டதை வைத்துக்கொண்டு ஏதோ ஒருவிதமாகச் சமாளித்தாள். ஆசாவுக்கு ஒரே திகைப்பாக இருந்தது.

இவ்வாறு உணவு, உடை, ஓய்வு, வேலை எந்த நேரத்திலும், எல்லா விஷயங்களிலும், பல வழிகளில் விநோதினியின் பணிவிடையைப் பெற்றான் மகேந்திரன். விநோதினி பின்னிய கம்பளிக் கால்சட்டை அவன் காலை மூடியது. கழுத்திலோ அவள் போட்ட கம்பளிக் கழுத்துப் பட்டை சுற்றிக்கொண்டு ஏதோ உள்ளத்தின் பரிசம்போல் இன்ப உணர்ச்சியை மூட்டியது. ஆசா தினமும் தோழியின் கையால் ஒழுங்காக அழகுபடுத்திக்கொண்டு வாசனை பூசி மகேந்திரனிடம் செல்வாள். அதில் அவளுடைய கைத்திறன் கொஞ்சம்; தோழியின் பங்கு கொஞ்சம். அவளுடைய அலங்காரத்தின் எழில், களிப்பு இவைகளில் கங்கையும் யமுனையும்போல் அவள் தோழியிடம் கலந்துவிட்டதாகச் சொல்லலாம்.

விஹாரிக்கு முன்போல் அவ்வளவு வரவேற்பு இல்லை. அவனை அழைப்பதும் இல்லை. அவன் மகேந்திரனிடம், மறுநாள் ஞாயிறன்று பிற்பகல், ராஜலட்சுமியே தன் கையால் பரிமாறத் தான் சாப்பிட வருவதாக எழுதியிருந்தான். விடுமுறை வீணுகுமே என்று அஞ்சி மகேந்திரன் ஞாயிற்றுக்கிழமை ஏதோ அவசிய வேலையாகத் தான் வெளியே போவதாகப் பரபரவென்று பதில் எழுதிவிட்டான். விஹாரி அப்படியும் உணவு கொண்ட பின்னர் மகேந்திரனுடைய வீட்டுக்கு வந்தான். சேவகனிடம் கேட்டதில் மகேந்திரன் வீட்டை விட்டுச் செல்லவே இல்லை என்பது தெரிந்தது. ''மகேன் அண்ணு!'' என்றவாறு அவன் மகேந்திரனுடைய அறைக்குள் சென்றான். மகேந்திரன் தடுமாற்றத்துடன், ''தலையை வலிக்கிறது'' என்று படுக்கையில் படுத்தான். ஆசா மகேந்திரனுடைய முகத்தையும், அவன் சொல்வதையும் கேட்டுத் தவித்தாள். என்ன செய்வதென்று புரியாமல் அவள் விநோதினியைப் பார்த்தாள். விநோதினிக்கு, இந்த நோய் ஒன்றும் பெரிதல்ல என்று தெரியும். இருந்தாலும், அவள் சற்றுக் கவலையுற்றவள்போல், ''வெகு நேரமாக உட்கார்ந்திருக்கிறீர்கள்: கொஞ்சம் படுங்கள். நான் 'யூ டி கொலோன்' கொண்டு வருகிறேன்'' என்றாள்.

''கிடக்கட்டும். பரவாயில்லை'' என்றான் மகேந்திரன்.

விநோதினி அதைக் கவனியாமல், 'யூ டி கொலோன்' கலந்த நீரில் ஒரு துண்டுத் துணியை நனைத்து ஆசாவின் கையில் கொடுத்து, ''மகேந்திர பாபுவின் நெற்றியில் இதைக் கட்டிவிடு'' என்றாள்.

மகேந்திரனோ, ''கிடக்கிறது'' என்று பல முறைகள்

சொன்னுன். விஹாரி உள்ளுக்குள் சிரிப்புடன் இந்த நாடகத்தைப் பார்த்துக்கொண்டு நின்ருன். 'விஹாரி பார்க்கட்டும், எனக்கு எவ்வளவு பெருமை என்று!' - இப்படிக் கர்வம் பொங்க எண்ணினுன் மகேந்திரன்.

விஹாரியின் எதிரே வெட்கப்பட்ட ஆசா மகேந்திரனுடைய நெற்றியில் துவாலையைச் சரியாகக் கட்ட முடியாமல் திணறினுள். யூ டி கொலோனின் ஒரு துளி மகேந்திரனுடைய கண்ணில் தெறித்தது. விநோதினி அவளிடமிருந்து துவாலையை வாங்கி ஒழுங்காக அவனுடைய நெற்றியில் கட்டினுள். மற்ருெரு துணியில் யூ டி கொலோனைத் தோய்த்துக் கொஞ்சங் கொஞ்சமாகப் பிழிந்தாள். ஆசா முக்காடு இட்டுக் கொண்டு விசிறத் தொடங்கினுள்.

''இப்போது எப்படி இருக்கிறது, மகேந்திர பாபு!'' என்ருள் விநோதினி, குரலில் இனிமை சொட்ட. இவ்வாறு கேட்ட விநோதினி விருட்டென்று ஒரு முறை விஹாரியின் முகத்தையும் கவனித்துக்கொண்டாள். விஹாரியின் கண்களில் குறும்பாடுவதைக் கண்டாள். இதெல்லாம் கேலிக்கூத்தாகவே அவனுக்குத் தோன்றுவதைப் புரிந்துகொண்டாள் விநோதினி. 'இந்த மனிதனை ஏய்ப்பது சுலபமல்ல; இவனுடைய நோக்கிற்கு எதுவும் தப்பாது' என்று கண்டுகொண்டாள் அவள்.

''விநோதினி மன்னி, இவ்வளவு பணிவிடை கிடைத்தால் நோய் தீராது; அதிகமாகத்தான் ஆகும்.''

''அதெல்லாம் எப்படி எங்களுக்குத் தெரியும்? நாங்கள் ஒன்றும் அறியாத பெண்கள். உங்கள் வைத்திய புஸ்தகத்தில் இப்படி எழுதியிருக்கிறதா என்ன?'' என்ருள் விநோதினி.

''இராமல் என்ன! பணிவிடையின் ஜோரைக் கண்டால் எனக்குங்கூடத் தலை வலிக்கத் தொடங்குகிறது. ஆனுல் என் துரதிருஷ்டம் இந்தப் பாழாய்ப்போன தலை தானுகவேதான் சரியாக வேண்டியிருக்கிறது. மகேன் அண்ணு அதிர்ஷ்டசாலிதான்!''

விநோதினி யூடிகொலோனில் நனைத்த துண்டுத் துணியை வைத்துவிட்டு, ''வேலையில்லை! உங்கள் நண்பருக்கு நீங்களே மருந்து கொடுங்கள்!'' என்ருள்.

இங்கு நடப்பவையெல்லாம் விஹாரிக்கு உள்ளூறக் கசப்பூட்டின. சில நாட்களாக அவன் படிப்பில் மூழ்கியிருந்தான். அதற்குள்ளாக மகேந்திரன், ஆசா, விநோதினி மூவருமாகக் கூடித் தாங்களாகவே ஒரு வலை பின்னிக் கொண்டுவிட்டது அவனுக்குத் தெரியாது. அன்று அவன் விநோதினியை நன்ருகக் கவனித்தான். அவளும் அவனை நன்கு பார்க்க முடிந்தது.

விஹாரி சற்றுக் கடுமையாகவே, ''நல்லது. தோழனுடைய நோயை நானே தீர்த்துவைக்கிறேன். தலைவலியை நான்தான் கொண்டுவந்தேன். நானே அதைத் திரும்ப எடுத்துப் போகிறேன். வீணாக ஏன் யூ டி கொலோனைக் செலவழிக்கிறீர்கள்?'' என்றவன், ஆசாவின் பக்கம் திரும்பி, ''மன்னி! வியாதிக்கு மருந்து தருவதைவிட, வியாதி வராமல் தடுப்பது மேல்'' என்றான்.

16

'இனிமேல் ஒதுங்கியிருப்பது கூடாது. எப்படியாவது இவர்கள் நடுவே ஓர் இடம் பிடித்துக்கொள்ள வேண்டும்; இவர்களில் யாருக்கும் அது பிடிக்காது. இருந்தாலும், நான் இருப்பது அவசியம்' என்று எண்ணினான் விஹாரி. அவன் அவர்களுடைய அழைப்புக்காகக் காத்திராமலே மகேந்திரனுடைய வியூகத்தினுள் நுழையலானான். ''விநோதினி மன்னி, இந்தப் பிள்ளையை இவனுடைய அம்மா,*குட்டிச்சுவரடித்தாள். நண்பனுங்கூடச் சேர்ந்துகொண்டான். மனைவியுங்கூட அப்படித்தான். நீயும் அந்தக் கூட்டத்தில் சேர்ந்து கொள்ளாமல் புது வழியைக் காட்டிவிடு. உனக்கு மிகவும் புண்ணியம் உண்டு'' என்று அவன் விநோதினியிடம் சொன்னான்.

''அப்படி என்றால்?''

''அதாவது, அந்தக் காலத்திலும் எவரும் அணுகாத என்னைப் போல் ஓர் ஆள்....''என்று மகேந்திரன் சொல்லும் போது, ''அவனைக் குட்டிச்சுவராக்குவதைத்தான் சொல்கிறேன்'' என்றான் விஹாரி.

• ''குட்டிச் சுவராவதுகூடச் சுலபமல்லடா, விஹாரி. நினைத்தால் ஆகிவிட முடியாது.''

''குட்டிச்சுவராக ஆவதற்குங்கூடத் திறமைவேண்டும், விஹாரி பாபு!'' என்றதும் சிரித்தாள் விநோதினி.

''சொந்தத்தில் திறமை இராவிட்டாலும் கைராசியால் ஆகலாமே! இடங் கொடுத்துத்தான் ஒருமுறை பாரேன்.''

''முதலிலிருந்தே தயாராக வந்துவிட்டால் போதாதே! எதிர்பாராமல் இருக்கவேண்டுமல்லவா?..என்னடி சொல்கிறாய் நீ! இந்த மைத்துனருடைய பொறுப்பை நீதான் ஏற்றுக் கொள்ளேன்'' என்றாள் விநோதினி ஆசாவைப் பார்த்து.

ஆசா தன் விரல்களால் அவளைத் தள்ளினாள். விஹாரி இந்தக் கேலிப்பேச்சில் கலந்துகொள்ளவில்லை.

ஆசாவைப்பற்றிய கேலிப் பேச்சு எதுவும் விஹாரிக்குப் பொறுக்காது என்பது விநோதினிக்கு நன்கு விளங்கியது. விஹாரி ஆசாவை மதிப்பதும், தன்னை அலட்சியமாகக் கருதுவதும் விநோதினியை உறுத்தின. அவள் மீண்டும், ''உன் மைத்துனர், பாவம், பிச்சைக்காரர் போல் என்னைச் சாக்கிட்டு உங்களிடந்தான் அன்பை நாடி வந்திருக்கிறார். ஏதாவது கொடேனடி'' என்று ஆசாவிடம் சொன்னாள்.

ஆசாவுக்கு மிகவும் கசப்பு மூண்டது. கணநேரம் விஹாரியின் முகமும் சிவந்தது. மறு கணமே அவன் சிரித்தான். ''என் விஷயத்தில்மட்டும் பிறத்தியாரிடம் சிபாரிசு செய்கிறாய்? மகேன் அண்ணாவிடம் மட்டும் மொத்த உரிமையாக்கும்!'' என்றான்.

விஹாரி முற்றும் பாழ்படுத்துவதற்கே வந்திருக்கிறான் என்பதைப் புரிந்துகொள்ள விநோதினிக்கு வெகு நேரமாகவில்லை. விஹாரிக்கு முன், ஆயுதபாணியாகவே இருக்கவேண்டுமென்பதை அவள் உணர்ந்தாள்.

மகேந்திரனுக்கும் கசப்பாகத்தான் இருந்தது. தெளிவாகச் சொன்னால் கேலியின் இனிய சூழ்நிலை நாசமாகிறதல்லவா! அவன் சற்றுக் கடுமையாக, ''விஹாரி! உன் மகேந்திரன் எந்த வியாபாரத்துக்கும் போகத் தேவையில்லை. கையில் இருப்பதைக்கொண்டே அவனுக்குத் திருப்தி'' என்றான்.

''அவன் போகாவிட்டாலும், அதிர்ஷ்டம் இருந்தால் வியாபாரத்தின் அலை வெளியேயிருந்தும் தாக்கலாமே!''

''உங்கள் கையில் தற்போது ஒன்றுமில்லை. ஆனால் உங்களிடமிருந்து அலை எந்தப் பக்கத்திலிருந்து வருகிறது?'' என்று குறும்புடன் சிரித்தவாறு விநோதினி ஆசாவை இடித்தாள். ஆசா வெறுப்புடன் எழுந்து சென்றாள். விஹாரியும் தோல்வியுற்ற கோபத்துடன் கம்மென்று எழுந்தான். விநோதினி, ''ஏமாற்றத்துடன் போகாதீர்கள், விஹாரி பாபு! நான் தோழியை அனுப்பிவைக்கிறேன்'' என்றாள்.

விநோதினி சென்றதுமே கச்சேரி முறிந்தது கண்டு மகேந்திரனுக்குக் கோபங் கோபமாக வந்தது. மகேந்திரனுடைய முகமாற்றத்தைக் கண்டு பொங்கி எழுந்த உள்ளத்தை விஹாரியால் அடக்க முடியவில்லை.

''மகேன் அண்ணா! நீ பாழாவதானால் எப்படியாவது போ! அதுதான் உனக்கு வழக்கமாகவே ஆகிவிட்டது. ஆனால் கள்ளங் கபடமற்ற வெள்ளையுள்ளம் படைத்த அந்தப் புண்ணியவதி உன்னையே நம்பியிருக்கிறாள். அவளை நாசமாக்காதே!

இப்போதும் சொல்கிறேன்: நாசமடிக்காதே அவளை!'' என்று சொல்லும்போது அவன் குரல் தடைப்பட்டது.

மகேந்திரனுக்கு உள்ளூறக் கோபம். அவன், ''விஹாரி! நீ சொல்வது எனக்கு ஒன்றுமே புரியவில்லை. உன் புதிரை விட்டுத் தெளிவாகச் சொல்லு'' என்றான்.

''தெளிவாகவே சொல்கிறேன். விநோதினி உன்னை வேண்டுமென்று பாவம் செய்ய இழுக்கிறாள். நீயும் அது புரியாமல் மூடனைப்போல் தவறான வழியில் காலெடுத்து வைக்கிறாய்.''

மகேந்திரன் உறுமினான்: ''பொய்! நீ இப்படிப் பெரிய இடத்துப் பெண்களைத் தவறாக நோக்குவாய் என்றால் பெண்கள் இருக்கும் இடத்துக்கு நீ வரவே கூடாது'' என்றான்.

இந்த வேளையில் ஒரு தட்டில் சிற்றுண்டியுடன் விநோதினி புன்னகை பூத்தவாறு வந்து, அதை அவன் எதிரே வைத்தாள்.

''இதென்ன! எனக்குப் பசியேதும் இல்லையே!'' என்றான் விஹாரி.

''அதென்ன! வந்த இடத்தில் சிற்றுண்டி சாப்பிடாமல் போகக்கூடாது'' என்றாள் விநோதினி.

''என் மனு ஏற்றுக்கொள்ளப்பட்டதாக்கும்! அதுதான் மரியாதை பலமாக ஆரம்பிக்கிறது.''

விநோதினி வாயைப் பொத்திக்கொண்டு சிரித்தாள். ''மைத்துனர் என்றால் உறவுக்குரிய மரியாதை உண்டே! கேட்டு வாங்கிக்கொள்ளும் இடத்தில் ஏன் பிச்சை எடுக்க வேண்டும்? மரியாதையை அதட்டிப் பெறலாமே! என்ன சொல்லுகிறீர்கள், மகேந்திர பாபு!'' என்றாள்.

மகேந்திரனுக்கு அப்போது பேசவே வாயெழவில்லை. ''விஹாரி பாபு! சாப்பிட வெட்கமா, அல்லது கோபத்துடன் சாப்பிடாமல் இருக்கிறீர்களா? வேறு யாரையேனும் அழைத்து வரவேண்டுமா?'' என்றாள் விநோதினி.

''அவசியமில்லை. எனக்குக் கிடைத்ததே அதிகம்.''

''கேலியா! உங்களுடன் எதிலுமே சமாளிக்க முடியாது; தின்பதற்குக் கொடுத்துங்கூட வாயை மூட முடியவில்லையே!''

அன்றிரவு ஆசா விஹாரியைப்பற்றி மகேந்திரனிடம் கோபத்துடன் புகார் செய்தாள். மற்ற நாட்களைப்போல் அன்று மகேந்திரன் சிரித்து அவற்றைப் பறக்கடிக்கவில்லை. அவளுடன் தானும் சேர்ந்துகொண்டான்.

மறுநாள் காலை எழுந்ததும் மகேந்திரன் விஹாரியின் வீட்டுக்குச் சென்றான். ''விஹாரி! விநோதினி ஆயிரம் இருந்தாலும் நம் வீட்டுப் பெண் அல்ல. நீ எதிரே வந்தால் அவளுக்குப் பிடிக்கவில்லை என்று தோன்றுகிறது'' என்றான்.

''அப்படியா! நான் செய்தது சரியல்லதான். அவளுக்குப் பிடிக்கவில்லை என்றால் நானும் அவளுக்கு எதிரே வரவில்லை.''

மகேந்திரனுடைய கவலை விட்டது. இந்தக் கடினமான காரியம் இவ்வளவு எளிதில் முடியுமென்று அவன் எண்ணவில்லை. விஹாரியிடம் அவனுக்குச் சற்றுப் பயமே.

அன்றைய தினமே விஹாரி மகேந்திரனுடைய வீட்டுக்கு வந்து, ''விநோதினி மன்னி! என்னை மன்னிக்கவேண்டும்'' என்றான்.

''ஏன், விஹாரி பாபு!''

''அந்தப்புரத்தில் உங்கள் எதிரே நான் வருவது உங்களுக்குப் பிடிக்கவில்லை என்று மகேந்திரன் சொன்னான். மன்னிப்புடன் விடையும் பெற்றுக்கொள்கிறேன்.''

''இதென்ன, விஹாரிபாபு! நான் இன்றைக்கு இருக்கிறேன்; நாளைக்குப் போய்விடுவேன். எனக்காக நீங்கள் போவானேன்! இவ்வளவு குழப்பம் உண்டாகும் என்று தெரிந்திருந்தால் நான் இங்கே வந்திருக்கவே மாட்டேன்'' என்று விநோதினி முகம் வாடிக் கண்ணீரை அடக்க வேகமாகச் சென்றுவிட்டாள்.

'வீண் சந்தேகப்பட்டு இவளைக் கஷ்டப்படுத்தி விட்டோமே!' என்று கண நேரம் விஹாரிக்குத் தோன்றியது.

அன்று மாலை ராஜலட்சுமி சற்று மனவேதனையுடன் மகேந்திரனிடம் வந்தாள்; ''அப்பா மகேன்! விபினனின் பெண்டாட்டி இன்று ஊருக்குப் போகிறேன் என்று ஒரே பிடிவாதமாக இருக்கிறாளடா!'' என்றாள்.

''ஏனம்மா! இங்கே ஏதாவது அசௌகரியமோ?''

''அசௌகரியம் என்ன? தன்னைப் போல் வயதுவந்த விதவை பிறர் வீட்டில் வெகு காலம் இருந்தால் ஊரார் பழிப்பார்களே என்றாள்.''

மகேந்திரன் குன்றிய குரலில், ''இது பிறத்தியான் வீடா?'' என்றான். விஹாரி உட்கார்ந்திருந்தான். மகேந்திரனுடைய கோபப் பார்வை அவன்மேல் விழுந்தது.

விஹாரி அநுதாபத்துடன், 'நேற்று நான் பேசியதில் ஓரளவு பழிச்சொல் இருந்தது உண்மைதான். அதனால்தான் விநோதினி மனக் கஷ்டப்படுகிறாளோ?' என்று எண்ணினான்.

கணவன் மனைவி இருவருக்குமே விநோதினியிடம் பிணக்கு மூண்டது. ''நான் வேற்று மனுஷிதானே!'' என்றாள் ஒருத்தி. மற்றவளோ, ''இத்தனை நாளுக்குப்பின் எங்களை ஒதுக்கிவிட்டாயா?'' என்றாள்.

''என்னை வாழ்நாள் முழுவதும் இங்கேயே இருக்கச் சொல்கிறீர்களா என்ன?'' என்றாள் விநோதினி.

"அவ்வளவு துணிச்சல் எனக்கு ஏது?" என்றான் மகேந்திரன்.

"பின் எதற்காக இவ்வளவு மனம் விட்டு நெருங்கிப் பழகினாய்?" என்றாள் ஆசா, விநோதினியைப் பார்த்து.

அன்று எதுவும் முடிவாகவில்லை. "இல்லையடி. இன்னும் இரண்டு நாள் பாசத்தை வளர்ப்பதில் பலன் இல்லை" என்று கண்ணீரும் கம்பலையுமாக மகேந்திரனை நோக்கினாள் விநோதினி.

மறு நாள் விஹாரி வந்தான். "விநோதினி மன்னி! போகிறேன் என்று ஏன் கிளம்புகிறாய்? நான் ஏதாவது தவறு செய்தேனா! அதற்குத் தண்டனையா இது?" என்றான்.

விநோதினி முகத்தை வேறு பக்கமாகத் திருப்பி, "நீங்கள் என்ன குற்றம் செய்தீர்கள்? என் தலையெழுத்து அப்படி!" என்றாள்.

"நீ போய்விட்டால், என்மேல் கோபத்துடன்தான் போய்விட்டாய் என்று எனக்கு மனத்தில் குத்திக்கொண்டே இருக்கும்."

விநோதினி கண்களில் இரக்கம் படர விஹாரியை நோக்கினாள். "நான் இங்கு இருப்பது நல்லதா, நீங்களே சொல்லுங்கள்?" என்றாள்.

விஹாரியின் பாடு திண்டாட்டமாயிற்று. அவள் தங்குவது சரியென்று எவ்வாறு சொல்வது? "நீ போகவேண்டியது தான் சரி. ஆனால் இன்னும் சில நாட்கள் தங்கிச் செல்ல உனக்கு ஏன் தயக்கம்?" என்றான் அவன்.

விநோதினி தன் கண்களைத் தாழ்த்திக்கொண்டாள். "நீங்கள் எல்லாருமாக என்னை இருக்கச் சொல்லுகிறீர்கள். உங்களுடைய பேச்சை மீறிச் செல்வது எனக்குக் கஷ்டமாகத் தான் இருக்கிறது. ஆனால் நீங்கள் செய்வது மிகவும் அநியாயம்!" என்றாள்.

இவ்வாறு சொல்லும்போது அவளுடைய மலர் விழிகளிலிருந்து பெரிய முத்துக்களாகப் பலபலவென்று நீர் உருண்டது.

இப்படிப் பெருகும் கண்ணீரைக் கண்டு விஹாரி மனவேதனைப் பட்டான். "இங்கு வந்த சில நாட்களிலேயே உனக்கே இயல்பான குணத்தால் எல்லோரையும் வசப்படுத்தி விட்டாய்! அதனால்தான் உன்னைப் பிரிய எவருக்கும் மனமில்லை. ஒன்றும் நினைக்காதே, மன்னி! இந்தமாதிரி ஒரு நல்ல மனுஷியை வேண்டுமென்று யார்தாம் ஒதுக்குவார்கள்!" என்றான் அவன்.

கூந்தலை ஒரு பக்கம் மூடியபடி உட்கார்ந்திருந்த ஆசாவும் தலைப்பினால் கண்களைத் துடைத்துக்கொண்டாள். அதற்கு மேல் விநோதினி ஊருக்குச் செல்வதென்ற பேச்சையே எடுக்கவில்லை.

17

நடுவில் முளைத்த இந்தக் குழப்பங்களை ஒரேடியாகத் துடைத்து விடவேண்டும் என்ற எண்ணத்துடன் மகேந்திரன், ''வருகிற ஞாயிற்றுக்கிழமையன்று 'தம்தம்' தோட்டத்திற்கு உல்லாசமாகப் போய் வரலாம்'' என்று தெரிவித்தான்.

ஆசாவுக்குக் களிப்புப் பொங்கியது. விநோதினி அதற்கு ஒப்புக்கொள்ளவில்லை. மகேந்திரனுக்கும் ஆசாவுக்கும் விநோதினியின் மறுப்பு ஏமாற்றத்தை அளித்தது. வரவர விநோதினி தங்களை விட்டு ஒதுங்கிச் செல்லுகிறாளென்றே அவர்களுக்குத் தோன்றியது.

அன்று பிற்பகல் விஹாரி வந்ததுமே விநோதினி, ''பாருங்களேன், விஹாரி பாபு, மகேன் பாபுவும், ஆசாவும் 'தம்தம்' தோட்டத்துக்கு உல்லாசமாகப் போகிறார்களாம், கூட வர விருப்பமில்லை என்றேன் நான். அதற்காக இரண்டு பேரும் என்மேல் கோபித்துக்கொண்டு உட்கார்ந்திருக்கிறார்கள்!'' என்றாள்.

''அவர்கள் கோபித்துக்கொள்வதில் தவறே இல்லை. நீங்கள் போகாவிட்டால் அவர்களுடைய தோட்ட விருந்து எப்படி இருக்கும் தெரியுமா! பல நாள் பகைவனுக்குக்கூட இப்படி நேரக்கூடாது என்றுதான் எண்ணத் தோன்றும்.''

''வாருங்களேன், விஹாரி பாபு! நீங்கள் வருவதானால் நானும் கூட வரத் தயார்.''

''நல்லது. ஆனால் எஜமானர் உத்தரவு தேவை. அவர் திருவுள்ளம் எப்படியோ?''

விநோதினி விஹாரியிடம் காட்டும் இந்தப் பரிவைக் கண்டு எஜமானன், அவனுடைய இல்லத்தரசி இருவருமே உள்ளூறக் குன்றிப் போனார்கள். விஹாரியும் கூட வருகிறான் என்றதுமே மகேந்திரனுடைய ஆவலில் பாதி பறந்தது. விஹாரியைக் கண்டால் விநோதினிக்கு ஆகவில்லை என்பதைத் தன் நண்பனுடைய மனத்தில் பதிய வைக்க அவன் தவித்துக்கொண்டிருந்தான். ஆனால் இனிமேல் விஹாரியைப் பிடித்துவைக்க அவனால் ஆகாதே!

''நல்லது. மிகவும் நல்லது! ஆனால், விஹாரி, நீ எங்கே போனாலும் ஏதாவது சிக்கலைக் கிளப்பாமல் விடமாட்டாயே. அங்கே ஊர்ப்பிள்ளைகளையெல்லாம் இழுத்துக்கொண்டு வந்தாலும் வருவாய்; இல்லையோ, யாரேனும் வெள்ளைக்காரனுடன் அடிதடியில் இறங்கினாலும் ஆச்சரியமில்லை.''

மகேந்திரனுடைய மனத்தில் உள்ள கசப்பை உணர்ந்து

தனக்குள் சிரித்துக்கொண்டான் விஹாரி; ''அதுதானே உலகத்தில் ஒரு வேடிக்கை. எங்கு, என்ன நடக்கும் என்பதை முன்னால் சொல்லவே முடியாது. விநோதினி மன்னி! காலையி லேயே கிளம்ப வேண்டும். நான் சரியாக வேளைக்கு வந்து சேருகிறேன்'' என்றான்.

ஞாயிறு காலையில் சாமான்களுக்கும் வேலையாட்களுக்கு மாக சாதாரண வண்டியும், எஜமானர்களுக்காக ஒரு கோச்சு வண்டியும் வாடகைக்கு அமர்த்திக்கொண்டனர். விஹாரி பெரிய பெட்டி ஒன்றை எடுத்துக்கொண்டு சமயத்தில் வந்தான். ''இது வேறே என்ன! அந்த வண்டியில் பிடிக் காதே!'' என்றான் மகேந்திரன்.

''கவலைப்படாதே! நான் ஏற்பாடு செய்கிறேன்'' என்றான் விஹாரி.

விநோதினி, ஆசா இருவரும் வண்டியினுள் ஏறிக்கொண் டார்கள். விஹாரியை எங்கு ஏறச் சொல்வது என்று மகேந் திரன் சற்றுத் தயங்கினான். அதற்குள் விஹாரி பெட்டியை வண்டியின்மேல் ஏற்றிவிட்டுச் சட்டென்று கோச்சின் வெளியே இருந்த இடத்தில் ஏறி உட்கார்ந்தான்.

மகேந்திரன் நிம்மதியுடன் பெருமூச்சு விட்டான். 'விஹாரி உள்ளே உட்காருவானோ, என்ன செய்வானோ?' என்று அவன் கவலைப்பட்டான். விநோதினி பரபரப்புடன், ''விஹாரி பாபு! விழுந்துவிட மாட்டீர்களே!'' என்றாள்.

விஹாரி அதைக் கேட்டு, ''பயப்படாதீர்கள்! விழுவதும், மயக்கம் போடுவதும் என்னைப் பொறுத்தவரை இல்லை!'' என்றான்.

வண்டி கிளம்பவும், மகேந்திரன், ''நான் வெளியே உட் கார்ந்துகொண்டு, விஹாரியை உள்ளே அனுப்பட்டுமா?'' என்றான்.

ஆசா பரபரப்புடன் அவனுடைய மேல் அங்கியைப் பிடித்துக்கொண்டாள். ''நீங்கள் அங்கே போகக்கூடாது'' என்றாள்.

''உங்களுக்குப் பழக்கமில்லை. விழுந்து வைப்பீர்கள்! வேண்டாம்'' என்றாள் விநோதினி.

மகேந்திரனுக்கு ரோஷம் பொத்துக்கொண்டு வந்தது. ''விழுவதா! ஒருகாலும் இல்லை'' என்று அவன் வெளியே போகக் கிளம்பினான்.

''நீங்கள் விஹாரி பாபுவைச் சொன்னீர்கள்! ஆனால் சிக்கல் கிளப்புவதில் நீங்களே முதல் ஆளாக இருக்கிறீர்களே!'' என்றாள் விநோதினி.

மகேந்திரனது முகம் வாடியது. ''சரி, ஒன்று செய்ய

லாம். நான் தனியாக ஒரு வண்டி பிடித்துக்கொண்டு வருகிறேன். விஹாரி உள்ளே உட்காரட்டும்'' என்றான் அவன்.

ஆசா, ''அப்படியென்றால் நானும் உங்களுடன் வருகிறேன்'' என்றாள்.

''நான் வண்டியிலிருந்து கீழே குதித்துவிட வேண்டுமாக்கும்'' என்று விநோதினி சொன்னதும் சிக்கல் ஒருவாறு தீர்ந்தது.

மகேந்திரன் வழி நெடுகிலும் ஒன்றுமே பேசாமல் வந்தான். வண்டி 'தம்தம்' தோட்டத்தை அடைந்தது. வேலையாட்களின் வண்டி முன்னரே கிளம்பியுங்கூட அது இருக்கும் இடமே காணவில்லை. இலையுதிர் காலம் காலைவேளை இனிமை பயந்தது. வெயிலில் பனித்துளிகள் காய்ந்து விட்டன. ஆனால் மரம், செடிகள் தெளிவான ஒளியில் பளிச்சென்று விளங்கின. தோட்டத்தின் ஓரமாகப் பாரிஜாத மலர்ச் செடிகளை வரிசையாக நட்டிருந்தது. அவற்றின் கீழெங்கும் மலர்கள் உதிர்ந்து இனிய மணத்தைப் பரப்பின.

கல்கத்தாவில் செங்கற் சுவர்களுக்கிடையே சிக்கித் தவித்த ஆசாவின் உள்ளம் பரந்த வெளியைக் கண்டதும் காட்டுமானைப் போலத் துள்ளியது. விநோதினியுடன் அவள் குவியல்களாகப் பூப் பொறுக்கினாள்; மரத்திலிருந்து சீதா பழத்தைப் பறித்து அந்த மரத்தின் கீழேயே உட்கார்ந்து கடித்துத் தின்றாள். தோழியர் இருவரும் ஏரியில் இறங்கி நீண்ட நேரம் துளைந்து நீராடினார்கள். இலைகளினூடே தப்பி வரும் கிரணங்கள், மரநிழல், குளத்து நீர், தோட்டத்தின் பூச்செடி கொடிகள் இந்தப் பெண்மணிகள் இருவருடைய அர்த்தமற்ற களிப்பு யாவும் ஒரு சிலிர்ப்பை யூட்டின.

குளித்துவிட்டு இருவரும் வந்தபோதுகூட வேலையாட்களின் வண்டி வரவில்லை. மகேந்திரன் தோட்ட வீட்டின் வராந்தாவில் ஒரு நாற்காலியில் உட்கார்ந்து ஆங்கிலக் கடையில் கிடைக்கும் சாமான் பட்டியல் ஒன்றைப் படித்துக்கொண்டிருந்தான். அவன் முகம் வற்றிக் கிடந்தது. ''விஹாரி பாபு எங்கே?'' என்று கேட்டாள் விநோதினி.

மகேந்திரன் சுருக்கமாக, ''தெரியாது'' என்றான்.

விநோதினி : வாருங்கள் அவரைத் தேடிப் பிடிக்கலாம்.

மகேந்திரன் : அவனை யாரேனும் திருடிக்கொண்டு போய் விடுவார்களோ என்ற கவலை வேண்டாம். தேடாமலேயே கிடைத்துவிடுவான் அவன்.

விநோதினி : ஆனால் அவர் உங்களுக்காகக் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறாரோ என்னவோ! பெறற்கரிய மாணிக்கம் போய்விட்டால்! அவருக்கு ஆறுதல் சொல்லலாம் வாருங்கள்.

ஏரியின்கரையில் விழுது இறங்கிக் கிழடு தட்டின ஓர் ஆலமரம். அங்கு விஹாரி தன் பெட்டியைத் திறந்து ஸ்டவ்வை எடுத்து மூட்டித் தண்ணீர் கொதிக்க வைத்திருந்தான். எல்லோரும் வந்ததுமே அங்கே ஆலமரத்தைச் சுற்றிக் கட்டியிருந்த மேடையில் உட்கார வைத்து ஆளுக்கு ஒரு கோப்பை தேநீரும், தட்டில் கொஞ்சம் பலகாரமும் கொடுத்தான். ''நல்ல வேளை, விஹாரி பாபு எல்லாவற்றையும் கையோடு கொண்டு வந்தார். ஒரு கோப்பை தேநீர் இராவிட்டால் மகேன் பாபுவின் கதி என்னவாகி யிருக்கும்!'' என்று திரும்பத் திரும்பச் சொன்னாள் விநோதினி.

தேநீர் கிடைத்ததும் மகேந்திரனுக்குச் சூடு பிறந்தது உண்மைதான். இருந்தும் அவன், ''இந்த விஹாரிக்கு எல்லாமே அவசரந்தான். விருந்துக்கு வந்த இடத்தில்கூட இவன் தன் மூட்டையை விடவில்லையே! இதில் களிப்பு என்ன இருக்கிறது?'' என்றான்.

''சரியப்பா, உன் தேநீரை இப்படித் தா. சாப்பிடாமல் களித்திரேன். யார் தடுத்தார்கள்?'' என்றான் விஹாரி.

பொழுது ஏறியது. ஆனால் வேலையாட்கள் வந்தபாடாக இல்லை. விஹாரியின் பெட்டியிலிருந்து சாப்பாட்டுக்குத் தேவையான பொருள்களும் வெளிவந்தன. அரிசி, பருப்பு, கறிகாய்கள், சிறு புட்டிகளில் அரைத்த மசாலா எல்லாம் கிடைத்தன. விநோதினி வியப்புடன், ''விஹாரி பாபு, எங்களையும் மிஞ்சிவிட்டீர்களே நீங்கள்! வீட்டில் மனைவி இல்லை; இருந்தும் இவைகளையெல்லாம் எங்கே தயாரிக்கக் கற்றீர்கள்?'' என்றாள்.

''உயிருடன் இருக்கவேண்டுமே! என்னைப்பற்றிக் கவலைப் பட நான்தானே இருக்கிறேன்'' என்று விஹாரி பரிகாசமாகச் சொன்னான். ஆனால் விநோதினி சற்று அதாபத்துடன் விஹாரியின் முகத்தை நோக்கினாள்.

விஹாரி, விநோதினி இருவருமாகச் சமைத்துப் பரிமாறுவதில் முனைந்தார்கள். ஆசா சற்றுக் கூச்சத்துடன் தானும் கலந்துகொள்ள முன்வந்தபோது விஹாரி அவளைத் தடுத்தான். மகேந்திரனுக்குக் கைத்திறன் இல்லை. ஆகவே, அவன் முன் வரவே இல்லை. அவன் ஆலமரத்தடிமீது கால்மேல் கால் போட்டவாறு சாய்ந்துகொண்டு, அசையும் ஆலமரத்தின் கிளைகளினூடே பாயும் சூரிய கிரணங்களின் விளையாட்டைக் கவனித்துக்கொண் டிருந்தான்.

சமையல் முடிந்ததும் விநோதினி, ''மகேன் பாபு, ஆல மரத்தின் இலைகளை எண்ணி முடிக்க உங்களால் முடியாது; குளித்துவிட்டு வாருங்கள்'' என்றாள்.

வேலையாட்கள் இவ்வளவு நேரமான பிறகு சாமான் முஸ்தீப்புகளுடன் வந்து சேர்ந்தார்கள். அவர்களுடைய வண்டி வழியில் முறிந்துவிட்டது. பொழுதும் அப்பொழுது பிற்பகலாகிவிட்டது.

சாப்பிட்டானதும் ஆலமரத்தின் அடியில் சீட்டாடுவதென்று ஒரு யோசனை கிளம்பியது. மகேந்திரன் அதற்கு இணங்கவில்லை. சற்று நேரத்துக்குள் மரத்தின் நிழலில் அவன் தூங்கிவிட்டான். ஆசா தோட்ட வீட்டினுள் கதவை அடைத்துக்கொண்டு இளைப்பாறச் சென்றாள். விநோதினி தலையை முக்காட்டினால் சற்றே மூடியவாறு, ''நான் உள்ளே போகட்டுமா?'' என்றாள்.

''எங்கே போகிறீர்கள்? கொஞ்சம் பேசலாம். உங்கள் ஊரைப்பற்றிச் சொல்லுங்கள்'' என்றான் விஹாரி.

கண நேரத்துக்கு ஒரு முறை நடுப்பகலின் வெம்மையான காற்று மரத்தின் இலைகளை அசைத்தது. ஏரிகரையில் நாவல் மரத்தின் அடர்ந்த இலைக்குவை நடுவே குயில் அவ்வப்போது கூவியது. விநோதினி தன் இளமைப் பருவ வரலாறுகளைக் கூறத் தொடங்கினாள். தாய் தந்தை, தோழியரின் கதைகளைச் சொல்லும்போது தலைத்துணி சரிந்தது. இளமையின் செவ்வி அவள் முகத்தில் எப்போதுமே இருக்கும். இளமையின் நினைவுகள் அந்த வனப்பைப் பின்னும் குளிர்வித்தன. அவளுடைய குறும்பு விழிகளின் கூரிய நோக்கு இதுவரை விஹாரியின் உள்ளத்தில் பலவகை ஐயங்களை எழுப்பியது. அதே கார்விழிகளின் ஒளி அமைதியின் நிழலுடன் தோய்ந்து இருப்பதைக் கண்டு விஹாரி அவளைப் புதுவிதப் பிறவியாகவே நினைத்துவிட்டான். ஒளிச்சுடர் நடுவே இனிமையும் மென்மையும் வாய்ந்த ஓர் இதயத்தில் இன்னும் அன்போட்டம் இருப்பதை அவன் உணர்ந்தான். இளமையின் சரச கேளிக்கையை அநுபவிக்க முடியாத வேதனையால் அவளது பெண்மை வற்றி விடவில்லை. நாணோடு மிடைந்து கற்பில் சிறந்த ஒரே மனத்துடன் கணவனை வழிபடும் ஒரு பெண்ணாகவோ, குழந்தையைக் கையில் ஏந்திய தூய அன்னையாகவோ கணப்பொழுதுகூட அவளைப்பற்றிக் கனவிலும் அவன் நினைத்தவனல்ல. அன்று திரை விலகிக் கணநேரம் வீட்டினுள் ஒரு மங்களகரமான காட்சியைக் கண்டான். வெளிப் பார்வைக்கு விநோதினி கேளிக்கைகளில் ஈடுபட்டாலும், உள்ளூற அவள் தூய்மையுடன் நோன்பிருக்கிறாள் என்று எண்ணினான் விஹாரி. அவன் உள்ளுக்குள் பெருமூச்செறிந்தான். ''மனிதன் தன் இயல்பைத் தானே உணருவதில்லை. கடவுள்தான் அதை அறிய வல்லவர். சூழ்நிலைக்கு ஏற்றபடி அமையும் வெளித் தோற்றமே உலகிற்கு

உண்மையாகி விடுகிறது'' என்று அவன் தனக்குள் சொல்லிக் கொண்டான். பேச்சு முடியாமல் இருக்க விஹாரி ஏதாவது கேள்விகள் கேட்டுக் கிளறிக்கொண் டிருந்தான். தான் சொல்லுவதையெல்லாம் இப்படிக் கேட்கும் ஆள் விநோதினிக் கும் இதுவரையில் கிடைத்ததில்லை. அதிலும், ஆண்மகன் ஒருவனுடன் இவ்வளவு சாதாரணமாகத் தன்னை மறந்து அவள் பேசியதே இல்லை. அன்று ஓயாது தன்னை மறந்து மனத்தைத் திறந்து பேசியதில் அவளுடைய உள்ளம் புது மழையில் நனைந்ததுபோலத் தண்மையும், தூய்மையும், நிறை வும் பெற்றது.

விடியலில் எழுந்த தொல்லையால் களைத்துப்போன மகேந்திரன் மாலை ஐந்து மணிக்குத்தான் தூக்கம் கலைந்து எழுந்தான். ஒருவித வெறுப்புடன் அவன், ''திரும்புவதற்கு ஏற்பாடுகள் செய்யவேண்டுமே!'' என்றான்.

''இன்னும் சற்று இருட்டியபின் போனால்தான் என்ன? ஒன்றும் மூழ்கிவிடாதே!'' என்றாள் விநோதினி.

'' வேண்டாம். கடைசியில், குடித்துவிட்டு வரும் வெள்ளைக்காரன் எவனிடமாவது சிக்கிக்கொள்ள வேண்டி யிருக்கும்.''

சாமான்களைத் திரட்டிக்கொள்ளுவதற்குள் இருட்டி விட்டது. இதற்குள் வேலைக்காரன் ஓடிவந்தான். ''வாடகை வண்டி போன இடம் தெரியவில்லை. வண்டி தோட்டத்துக்கு வெளியே நின்றிருந்தது. இரண்டு வெள்ளைக்காரர்கள் வண்டிக் காரனைப் பலவந்தமாக ஸ்டேஷனுக்கு இழுத்துச் சென்று விட்டார்கள்'' என்று அவன் தெரிவித்தான்.

வேறு ஒரு வண்டி கொண்டுவர வேலையாள் சென்றான். மகேந்திரன் கசப்புடன் முணுமுணுத்துக் கொண்டான்: ''இன்று வீணாகப் பொழுது போய்விட்டது.'' பொறுமை இல்லை அவ னுக்கு. அதை அடக்க முடியாத நிலையில் இருந்தான் அவன்.

வளர்பிறைச் சந்திரன் இலைகள் குவிந்த பக்கத்தை விட் டுத் திறந்த வானிடையே எழுந்தது. அமைதியான தோட்டம் நிழல் உலகில் ஆழ்ந்தது. இந்த மாயா லோகத்தின் நடுவே விநோதினி தன்னை ஓர் அபூர்வமான தோற்றத்தில் கண்டாள். செடிகளின் நடுவே சென்ற பாதையில் அன்று ஆசாவைத் தழுவியபோது அவளிடம் முன்போல் நடிப்புக் காணப்பட வில்லை. அவளுடைய விழிகளில் கோவையாக நீர் வடிவதைக் கண்டாள் ஆசா. உடனே பரபரப்புடன், ''என்னடி, ஏன் அழுகிறாய்?'' என்று கேட்டாள்.

''ஒன்றுமில்லையடி எனக்கு; நான் நன்றாகத்தான் இருக் கிறேன். இன்று நன்றாகவே பொழுது போயிற்று.''

''உனக்கு எதனால் இப்படித் தோன்றுகிறது?''

''நான் செத்துப்போய்ப் பரலோகத்துக்கு வந்துவிட்டாற் போல் இருக்கிறது. அங்கே எனக்கு எல்லாம் மீண்டும் கிடைக்குமல்லவா?''

ஆசா வியப்புற்றாள். அவளுக்கு இது ஒன்றும் விளங்கவில்லை. சாவு என்ற சொல்மட்டும் அவளுக்குக் கஷ்டம் அளித்தது. ''சீச்சீ! அப்படியெல்லாம் சொல்லாதே!'' என்றாள் அவள்.

வண்டி கிடைத்தது. விஹாரி மீண்டும் வண்டியோட்டுபவனின் பக்கத்தில் அமர்ந்தான். விநோதினி வாய் திறவாமல் வெளியே பார்த்துக்கொண்டு வந்தாள். நிலவில் திகைத்து நிற்கும் மரங்கள் நிழல் வெள்ளம்போல் அவளுடைய விழிகளின் முன்னே ஓடின. வண்டியின் மூலையில் ஆசா தூங்கிவிட்டாள். மகேந்திரன் நீண்ட வழியெங்கும் மனம் ஒடுங்கி உட்கார்ந்து கிடந்தான்.

18

தோட்ட விருந்து நடந்த நாள் கெட்ட நாள் என்றே பட்டது மகேந்திரனுக்கு. அதற்குப் பின் அவன் விநோதினியை மீண்டும் தன்வசப் படுத்திக்கொள்ள ஆசைப்பட்டான். ஆனால், மறு நாளே ராஜலட்சுமி இன்புளுயென்ஸா காய்ச்சலில் படுத்துக்கொண்டாள். கடுமையான நோய் இல்லை என்றாலும் அவளுடைய உடலில் பலவீனம் அதிகமாக இருந்தது. விநோதினி இரவு பகல் பாராமல் அவளுக்குப் பணிவிடை செய்வதில் ஈடுபட்டாள்.

''இப்படி இரவுபகலாக உழைத்தால் கடைசியில் உனக்கு உடம்புக்கு வந்துவிடுமே! அம்மாவுக்குப் பணிவிடை செய்ய ஆள் ஏற்பாடு செய்துவிடுகிறேனே!' என்றான் மகேந்திரன்.

''மகேன் அண்ணா! நீ ஏன் கவலைப்படுகிறாய்? அவள் பணிவிடை செய்வதானால் செய்யட்டும். வேறு எவரால் இப்படிச் செய்ய முடியும்!'' என்றான் விஹாரி.

நோயாளியின் அறைக்கு மகேந்திரன் அடிக்கடி வரலானான். ஒருவன் தான் வேலை செய்யாமல் பிறர் வேலை செய்யும்போது விடாமல் பின் தொடர்வது என்றால் வேலையே கருத்தாக இருக்கும் விநோதினிக்குப் பிடிக்காது. அவள் வெறுப்புடன் இரண்டொரு தடவை சொல்லிப் பார்த்தாள்; ''மகேன் பாபு,

இங்கே உட்கார்ந்திருப்பதில் என்ன பயன்? நீங்கள் போங்கள். வீணாகக் காலேஜுக்கு மட்டம் போடாதீர்கள்'' என்றாள்.

மகேந்திரன் தன்னைப் பின் தொடர்வதில் விநோதினிக்கு ஒரு பெருமையும் இன்பமும் இருந்தன. ஆனால் இப்படிப் பிச்சைக்காரன் போல், நோய்ப்பட்டிருக்கும் தாயின் படுக்கையருகில் பேராசை பிடித்த உள்ளத்துடன் காத்துக் கிடப்பதை அவளால் சகிக்க முடியவில்லை. வெறுப்பே மூண்டது அவளுக்கு. ஏதாவது வேலையில் மனத்தைச் செலுத்தினால் வேறு எதுவுமே அவளுக்கு நினைவிராது. சாதம் பரிமாறுவது, நோயாளிக்குப் பணிவிடை, வீட்டு வேலை இவை இருக்கும் வரையில் விநோதினி ஓய்வாக இருந்ததே இல்லை. அவசியம் இருக்கும்போது மற்றவர் அவ்வாறு சோம்பித் திரிவதையும் அவள் பொறுக்க மாட்டாள்.

விஹாரி அவ்வப்போது சிறிது நேரம் ராஜலட்சுமியைப் பற்றி விசாரிக்க வருவான். உள்ளே நுழைந்ததுமே எது தேவை என்று புரிந்துகொள்வான். ஏதேனும் குறைகள் இருந்தால் அது அவன் கண்களில் படும். அந்தக் கொஞ்ச நேரத்தில் அதை அவன் சரிக்கட்டிச் செல்வான். விஹாரி, தான் செய்யும் பணிவிடைக்கு உரிய மதிப்புத் தருகிறான் என்று விநோதினிக்குத் தெரியும். ஆகவே, விஹாரி வருவதை அவள் ஒரு வெகுமதி என்றே கருதினாள்.

அவச்சொல்லும், கடுமையான கட்டுப்பாடும் சேர்ந்து மகேந்திரனைக் காலேஜுக்குச் செல்ல வைத்தன. ஏற்கனவே அவனுடைய மனநிலை கொதிப்பேறியிருந்தது. இந்த மாறுதல் வேறு சேர்ந்துகொண்டது. வேளையில் உணவு கிடைப்பதில்லை; வண்டிக்காரன் காணாமல் போய்விடுகிறான்; கால் சட்டைகளில் கிழிசல் பெரிதாகிக்கொண்டே வந்தது. இந்த அசௌகரியங்கள் முன்போல் அவனுக்கு வேடிக்கையாகத் தோன்றவில்லை. அவசியத்துக்கு ஏற்றபடி கேட்பவை எல்லாம் கைக்கு ஒழுங்காக வந்து சேருவதில் உள்ள நிம்மதியை அவன் நன்கு அநுபவித்துவிட்டான். இப்போதெல்லாம் அம்மாதிரி கிடைப்பதில்லை. ஆசாவின் மக்குத்தனம் முன் போல் வேடிக்கையாகத் தோன்றவில்லை அவனுக்கு.

''சுனி! குளிக்குமுன்பே என் சட்டைக்குப் பித்தான் போட்டு வை, என் கால் சட்டை, கோட்டு எல்லாவற்றையும் தயாராக எடுத்து வை என்று எத்தனை தடவை சொன்னேன்? ஒரு நாளாவது சரியாக இருந்ததில்லை எதுவும். குளித்துவிட்டுச் சட்டையைத் தேடுவதும், வேஷ்டி தேடுவதுமாக இரண்டு மணி நேரம் வீணாகிறது எனக்கு!''

ஆசா உள்ளூறப் புழுங்குவாள். ''நான் வேலையாளிடம்

சொல்லியிருந்தேனே!'' என்று அவள் முக வாட்டத்துடன் சொல்லுவாள்.

''வேலைக்காரனிடமா சொன்னாய்! நீயாக எடுத்து வைப்பதில் என்ன தவறு! உன்னால் ஏதாவது உபயோகம் உண்டா?''

ஆசாவுக்கு இடி விழுந்தாற்போல் ஆயிற்று. இப்படி மிரட்டலைக் கேட்டதேயில்லை அவள். ''நான் வேலை கற்றுக் கொள்ளத் தடையாக இருந்தவர் நீங்கள்தானே?'' என்று பதில் சொல்ல அவளுக்கு வாயோ, அந்த நினைவோ இல்லை. வீட்டு வேலைகளுக்குப் பழக்கமும், முன்னறிவும் தேவை என்ற விஷயமே அவளுக்குத் தெரியாது. 'எனக்குத் திறமை போதாது; நான் முட்டாள்! அதனால்தான் எந்தக் காரியமும் சரிவரச் செய்ய என்னால் முடியவில்லை' என்றே அவள் நினைத்தாள். தன்னை மறந்து மகேந்திரன் விநோதினியுடன் ஆசாவை ஒப்பு நோக்கிக் குறை கூறும்போது, ஆசா வெறுப்பின்றிப் பணிவாக அதைப் பொறுத்துக்கொண்டாள்.

ஆசா ஒரொரு வேளை, நோயுற்றிருக்கும் மாமியாரின் அறைக்கு அருகே செல்வாள்: கூச்சத்துடன் அறை வாயிலில் வந்து நிற்பாள். அந்தக் குடும்பத்துக்குத் தானும் அவசியம் என்று காட்டிக்கொள்ள அவள் விரும்பினாள். வேலை செய்ய அவள் சென்றால், எவரும் அவளை விரும்பவில்லை. எப்படி வீட்டு வேலைகளில் கலந்துகொள்வது, குடும்பத்தினுள் பங்கு கொள்வது எப்படி என்று அவளுக்குத் தெரியவில்லை. தனக்குத் திறமையில்லை என்ற கூச்சம் அவளை வெளியிலேயே அலைய வைத்தது. உள்ளத்தினுள் ஒரு வேதனை நாளுக்கு நாள் அதிகரித்தது. ஆனால் அந்தத் தெளிவற்ற வேதனை, புலனாகாத சந்தேகம் என்ன என்று அவளுக்குப் புரியவில்லை. தன்னைச் சுற்றி எல்லாம் வீணாவதை உணர்ந்தாள். ஆனால் அது எவ்வாறு உண்டாயிற்று, எப்படி வீணாகிறது, அதற்கு என்ன பரிகாரம் செய்யவேண்டும் - இவையெல்லாம் அவளுக்குத் தெரியவில்லை. 'நான் எதற்கும் தகுதியற்றவள்; கையால் ஆகாதவள். என் முட்டாள்தனத்துக்கு அளவேயில்லை' என்று வாய்விட்டு அழலாமா என்றிருந்தது அவளுக்கு.

முன்பெல்லாம் ஆசா, மகேந்திரன் இருவரும் அறையின் ஒரு மூலையில் உட்கார்ந்து, பேசிக்கொண்டோ பேசாமலோ நிம்மதியாகப் பொழுது போக்கினார்கள். இப்போதோ விநோதினி இராமல் ஆசாவுடன் தனியே உட்கார்ந்து மகேந்திரனால் சாதாரணமாகப் பேச முடியவில்லை. கம்மென்று பேசாமல் இருக்கவும் ஏதோ போல் இருந்தது.

மகேந்திரன் வேலையாளைப் பார்த்து, ''யாருக்கு இந்தக் கடிதம்?'' என்றான்.

''விஹாரி பாபுவுக்கு.''

''யார் கொடுத்தது?''

''எஜமானியம்மா (விநோதினி).''

''கொண்டா'' என்று அவன் கடிதத்தை வாங்கிக் கொண்டான். கிழித்துப் படிக்கலாமா என்று ஓர் ஆவல்: இரண்டு மூன்று தடவை திருப்பித் திருப்பிப் பார்த்துவிட்டு வேலையாளிடமே அதைக் கொடுத்தான். கடிதத்தைத் திறந்து படித்திருந்தால் இவ்வளவேதான் அதில் இருந்திருக்கும்: ''ஜவ்வரிசி, பார்லிக் கஞ்சி சாப்பிட மாட்டேன் என்கிறார் அத்தை. இன்று அவருக்குப் பருப்பும் சாதமும் போடலாமா?''- மருந்து, பத்தியம் விஷயமாக விநோதினி மகேந்திரனை ஒன்றுமே கேட்பதில்லை. அதற்கெல்லாம் விஹாரியைத்தான் அவள் நம்பியிருந்தாள்.

மகேந்திரன் வராந்தாவில் சிறிது நேரம் உலாவிய பின் அறையினுள் நுழைந்தான். சுவரில் மாட்டியிருந்த படம் ஒன்றின் கயிறு நைந்துபோய்ப் படமே சாய்ந்து கிடந்தது. அவன் ஆசாவை அதட்டினான்; ''உன் கண்ணில் எதுவுமே படுவதில்லை. இப்படித்தான் எல்லாமே நாசமாகிறது'' என்றான். தம்தம் தோட்டத்திலிருந்து அன்று விநோதினி கொணர்ந்து வைத்த மலர்ச்செண்டு பூச்செப்பில் அப்படியே வாடிக் கிடந்தது. வேறு நாளாக இருந்தால் அது மகேந்திரனுடைய கண்களில் பட்டே இராது. அன்று அது அவன் பார்வையில் விழுந்தது. 'விநோதினி வந்து அதை வெளியே எறியாவிட்டால், அது அப்படியேதான் கிடக்கும்!' என்று அவன் பூச்செண்டுடன் பூச்செப்பையும் எடுத்து வெளியே எறிந்தான். அது மாடிப்படிகளில் டங்டங்கென்று உருண்டது. 'ஆசா ஏன் என் மனம் போல் ஆகவில்லை? எனக்குப் பிடித்தாற் போல் அவள் ஏன் நடக்கவில்லை? சுபாவமாக இருக்கும் பல வீனத்தையும், தளர்ச்சியையும் விட்டுக் குடும்ப வழியில் ஏன் என்னை உறுதியாகப் பிடித்து வைத்துக்கொள்ளவில்லை? எப்போதும் என்னை ஏன் அலைக்கழிக்கிறாள்?' - மகேந்திரனுடைய மனம் இவ்வாறெல்லாம் குழம்பியது; சட்டென்று அவன் பார்வை ஆசாவின் பக்கம் சென்றது. ஆசாவின் முகம் வாடிக் கிடந்தது; கட்டிலின் காலைப் பிடித்துக்கொண்டு நின்றிருந் தாள் அவள்; அவளுடைய உதடுகள் நடுங்கின: சரசரவென்று அவள் பக்கத்து அறை வழியாகச் சென்றாள்.

மகேந்திரன் மெல்லத் தானே போய்ப் பூச்செப்பைக் கொணர்ந்து வைத்தான். அறையின் மூலையில் மேஜை இருந் தது. நாற்காலியில் உட்கார்ந்தபடி மேஜையின்மேல் கைகளில் தலை ஊன்றியவாறு வெகு நேரம் கிடந்தான்.

இருட்டியதும் விளக்கு அறைக்கு வந்து சேர்ந்தது. ஆனால் ஆசா வரவில்லை. மகேந்திரன் வேகமாக மேல்மாடிக்கு உலாவச் சென்றான். இரவு மணி ஒன்பது அடித்தது. ஜனங்களே அவ்வளவாக இராத மகேந்திரனுடைய வீடு நள்ளிரவைப் போல் கம்மென்று அடங்கியது. அப்போதும் ஆசா வர வில்லை. மகேந்திரன் அவளைக் கூப்பிட்டனுப்பினான். ஆசா கூசியவாறு மாடிக்குச் செல்லும் கதவருகே வந்து நின்றாள். மகேந்திரன் தானே வந்து அவளைத் தன்னருகில் அழைத்து அணைத்துக்கொண்டான். கண நேரத்துக்குள் கணவனின் மார்பில் முகம் புதைத்து ஆசா விக்கி விக்கி அழுதாள். அவளால் அதை அடக்க முடியவில்லை. கண்களில் நீரும் ஆறாக வடிந்து அழுகுரலும் அடக்க முடியாமல் தொண்டையை விட்டு வெளிவந்தது. மகேந்திரன் அவளை ஆரத் தழுவிக் கூந்தலை முத்தமிட்டான். மோனம் பரவிய வானத்தில் விண் மீன்கள் நிச்சப்தமாக இதைக் கண்ணுற்றன.

அன்றிரவு மகேந்திரன் ஆசாவிடம், ''காலேஜில் எனக்கு இரவு வேலை போட்டிருக்கிறார்கள். ஆகவே, கொஞ்ச நாள் காலேஜுக்கு அருகிலேயே வீடு எடுத்துக்கொள்ள வேண்டும்'' என்றான்.

'இன்னுமா கோபம்! என்மேல் வெறுப்புக் கொண்டு வெளியே போகிறாரா? என் முட்டாள்தனத்தால் இவரை வீட்டிலிருந்தே துரத்தி விடுகிறேனா! நான் சாவதுமேல் அல்லவா!' என்று ஆசா எண்ணினாள்.

ஆனால் மகேந்திரனுடைய செய்கைகளில் கோபத்தின் அறிகுறியே இல்லை. அவன் வெகு நேரம் ஒன்றும் பேசாமல் ஆசாவின் முகத்தைத் தன் மார்பில் பதித்தவாறு அவளது கூந்தலைக் கைவிரலால் கோதினான். முன்பும் இவ்வாறு மகேந் திரன் கூந்தலைக் கோதிப் பின்னலை அவிழ்த்துவிடுவான். அப்போதெல்லாம் ஆசா அவனுடன் சண்டையிடுவாள். இன்று அவள் அவ்வாறு செய்யாமல் அதில் ஓர் இன்பச் சிலிர்ப்பை அநுபவித்தாள். இந்தச் சமயத்தில் சட்டென்று அவள் நெற்றியின்மேல் நீர்ச் சொட்டு ஒன்று விழுந்தது. மகேந்திரன் ஆதரவுடன் அவள் முகத்தை நிமிர்த்தி அன் பொழுகும் குரலில், ''சுனி!'' என்றான். ஆசா அதற்குப் பதில் ஒன்றும் பேசாமல், அவனைத் தன் மென்கரங்களால் அழுந்தத் தழுவினாள். மகேந்திரன், ''நான் செய்தது தப்பு. என்னை மன்னித்துவிடு'' என்றான்.

பூவினும் மென்மையான தன் கையால் ஆசா அவன் வாயைப் பொத்தினாள். ''இல்லை; அப்படிச் சொல்லாதீர்கள்! நீங்கள் என்ன தவறு செய்தீர்கள்? தப்பு என்னுடையதுதான்.

அடிமைபோல் தண்டனை கொடுங்கள். உங்கள் பாதங்களில் கிடக்க ஏற்றவளாக என்னை ஆக்கிக்கொள்ளுங்கள்'' என்றாள்.

விடை பெறும் நாளன்று காலையில் படுக்கையை விட்டு எழுந்திருக்கும்போது மகேந்திரன், ''சுனி, நீ என் மாணிக்கம். உன்னை என் இருதயத்துள் எல்லாவற்றுக்கும் மேலாக வைத்துக் கொள்வேன். அங்கு உன்னை மீறிக்கொண்டு செல்ல எவராலும் முடியாது'' என்றான்.

ஆசா தன்னுடையது எல்லாவற்றையும் துறக்க உறுதி பூண்டவளாகத் தன் கணவனிடம் தனி சிறு வேண்டுகோளைத் தெரிவித்தாள்; ''நீங்கள் தினமும் ஒரு கடிதம் எனக்கு எழுத வேண்டும்'' என்றாள்.

''நீயும் எழுதுகிறாயா?''

''எனக்கு என்ன, எழுதத் தெரியுமா?''

காதருகில் படிந்த அவளுடைய கூந்தலை சற்றே விலக்கியவாறு மகேந்திரன், "*அட்சயகுமார தத்தரைவிட உனக்கு நன்றாக எழுதத் தெரியும்-அதாவது, பாலசிட்சை" என்றான்.

''போதுமே, உங்கள் கேலியெல்லாம்!''

போகுமுன் ஆசா தன் கையால் மகேந்திரனுடைய பெட்டியை ஒழுங்காக வைக்க முயன்றாள். குளிருக்காகத் தைத்த அவனுடைய கோட்டுகள் இரண்டு உண்டு: அவைகளை மடிப்பது கடினம்; பெட்டியிலும் பிடிக்கும்படி இல்லை. இருவருமாகச் சேர்ந்து எப்படியோ ஒருவாறாக ஒரு பெட்டியில் பிடிக்கக் கூடியவற்றை இரண்டு பெட்டிகளில் நிரப்பினார்கள். தவறுதலாக விட்டுப்போனவை, தனித்தனி மூட்டைகளாக நின்றன. இது ஆசாவுக்கு மிகவும் வெட்கமூட்டியது என்றாலும், அவர்கள் பிடித்திழுப்பதும், ஒருவரையொருவர் குற்றங் கூறிக்கொள்வதுமாக முன்னாள் களிப்பை மீண்டும் அடைந்து அநுபவித்தனர். பிரிவுக்காகத்தான் இந்த ஏற்பாடு என்பதைக் கொஞ்ச நேரம் ஆசா மறந்தும் விட்டாள்.

வண்டி தயாராக இருப்பதைப் பத்துத் தடவை சொல்லியும் மகேந்திரன் அதைக் காதில் வாங்கவில்லை; கடைசியில் வெறுப்புடன், ''குதிரையை அவிழ்த்துவிடு" என்றான்.

காலை பகலாகி மாலையும் மங்கியது. அப்போதுதான் உடம்பைக் கவனித்துக்கொள்வது, தவறாமல் கடிதம் போடுவது, இன்னும் பலவிதங்களில் ஒருவரையொருவர் எச்சரிக்கை செய்தவாறு ஏங்கி வாடும் உள்ளங்களுடன் பிரிந்தனர்.

இரண்டு நாட்களாக ராஜலட்சுமியினால் உட்கார முடிந்தது. மாலை நேரம் அவள் கம்பளியால் உடம்பைப் போர்த்துக்

---

* பிரபல வங்க எழுத்தாளர்.

கொண்டு விநோதினியுடன் சீட்டாடிக்கொண்டிருந்தாள். உடம்பில் ஒரு விதச் சோர்வும் இல்லை. உள்ளே நுழைந்த மகேந்திரன் விநோதினியின் பக்கம் பார்க்கவே இல்லை. ''அம்மா! காலேஜில் எனக்கு இரவு வேலை தொடங்கிவிட்டது. இங்கே இருப்பது சௌகரியமில்லை. காலேஜுக்குப் பக்கமாக வீடு கிடைத்திருக்கிறது. இன்றுமுதல் அங்கே தான் இருக்கவேண்டும்'' என்று தாயிடம் சொன்னான்.

ராஜலட்சுமிக்கு உள்ளூற ரோஷம். ''சரி; போய் வா! படிப்புக்குக் குந்தகம் என்றால் போகத்தானே வேண்டும்!'' என்றாள் அவள். உடம்பு குணமாகி விட்டது என்றாலும், மகேந்திரன் போகிறான் என்ற செய்தி கேட்டதும் அவளுக்குச் சோர்வும் நோயும் திருப்பிக்கொண்டு விட்டதுபோல் உணர்ச்சி மூண்டது. ''அந்தத் தலையணையைக் கொண்டா, அம்மா!'' என்று அவள் விநோதினியிடம் சொன்னாள். அதன்மேல் சாய்ந்துகொண்டதும் விநோதினி மெல்ல அவள் அங்கங்களைத் தடவிக் கொடுத்தாள்.

மகேந்திரன், தாயின் நெற்றியில் கை வைத்துப் பார்த்தான். பிறகு நாடியைப் பிடித்தான். ராஜலட்சுமி கையை உதறிக்கொண்டாள். ''நாடி பார்த்துத் தெரிந்துவிடுமோ! நீ ஒன்றும் கவலைப்பட வேண்டாம். நான் நன்றாகத்தான் இருக்கிறேன்'' என்று அவள் மிகவும் கஷ்டத்துடன் வேறு பக்கம் திரும்பிப் படுத்தாள்.

மகேந்திரன் விநோதினியுடன் ஒன்றும் சொல்லிக் கொள்ளவில்லை. தாயை வணங்கிவிட்டுக் கிளம்பினான்.

19

விநோதினி தனக்குள் எண்ணமிட்டாள்: 'என்ன விசேஷம்? கோபமா, ரோஷமா அல்லது பயமா! என்னை ஒரு பொருளாக மதிக்கவில்லை என்று காட்டுவதற்குத்தானா இது! தனி வீட்டில் இருக்கப் போகிறாரோ! எத்தனை நாட்களோ பார்க்கலாம்! - ஆனால் அவள் உள்ளத்தின் அமைதி குறைந்தது. இதுவரையில் தினமும் அவள் மகேந்திரனைப் பல வலைகளால் பிணைத்தும், பல அம்புகளால் துளைத்தும் வந்தாள்; அந்த வேலை போய்விடவும், அவளுக்குப் பொழுதே போகவில்லை. வீட்டை விட்டுத் தன்னுடைய உயிரே சென்று விட்டதுபோல் ஆயிற்று அவளுக்கு. மகேந்திரன் இராமல்

ஆசாவின் நட்பு அவளுக்குச் சுவைக்கவில்லை. ஆசாவிடம் மகேந்திரன் காட்டும் பரிவும், காதலும், அந்த இன்பங்களை இழந்த விநோதினியின் உள்ளத்தைத் தூண்டிவிடும். அதன் மூலம் எழும் கற்பனைகளில் வேதனையும் தீவிரமான எரிச்சலும் கலந்திருந்தன. மகேந்திரன் அவளுடைய வாழ்வைப் பயனற்றதாகச் செய்தவன்: அவளைப் போன்ற மாணிக்கத்தை விட்டு ஆசாவைப்போல் அப்பாவிப் பெண்ணை மணந்தவன்: அவன் மேல் விநோதினிக்குக் காதலா, வெறுப்பா? அவனுக்குத் தண்டனை அளிப்பதா, இல்லை உள்ளத்தைக் கொடுப்பதா? - என்ன செய்வதென்று அவளுக்குத் தெரியவில்லை. மகேந்திரன் அவள் உள்ளத்தில் மூட்டிய தீ, பொறாமைத் தீயா அல்லது காதல் சுடரா? இல்லை, இரண்டும் கலந்த ஒன்றா? ஏது என்று அவளுக்கு விளங்கவில்லை. அவள் தனக்குள் இப்படிச் சொல்லிச் சிரித்துக்கொண்டாள்: ''என்னைப் போன்ற நிலை எந்தப் பெண்ணுக்கு நேர்ந்திருக்கிறது! நான் சாவதா, இல்லை கொல்வதா என்றே எனக்கு விளங்கவில்லையே!''

ஆனால் பொசுங்கிச் சாகவோ, அல்லது பொசுக்கித் தள்ளவோ, மகேந்திரன் அங்கு அவசியம் தேவை. நஞ்சு பொதிந்த அவளுடைய தீய அம்பை உலகில் எவர்மேல் எறிவது! ஆழ்ந்த பெருமூச்சுடன், ''அவர் எங்கே சென்று விடுவார்! அவர் திரும்பத்தான் வேண்டும். அவர் எனக்குத் தான் உரியவர்!'' என்று சொல்லிக்கொண்டாள் விநோதினி.

சில நாட்களுக்கெல்லாம் மகேந்திரனுக்கு அவனுடைய விடுதி விலாசத்துக்குப் பழக்கமான கையெழுத்தில் ஒரு கடிதம் கிடைத்தது. பகலெல்லாம் கலவரம்; அதனால் அவன் அதைத் திறந்து பார்க்கவில்லை. மார்பினருகில் சட்டைப் பையில் வைத்துக்கொண்டான். காலேஜில் படிக்கும்போதும், ஆஸ்பத்திரியில் சுற்றும்போதும் நடுநடுவே காதல் பறவை ஒன்று மார்பில் கூடுகட்டித் தூங்குவதுபோல் அவனுக்குத் தோன்றியது. அதை எழுப்பினால் அதன் மென்குரலின் தீஞ்சுவை காதில் வந்து பாயும்.

மாலை நேரம்; அவன் தனி அறையில் விளக்கொளியில் சாய்வு நாற்காலியில் நன்றாகச் சாய்ந்துகொண்டான். மார்பினுள் மறைந்திருந்த கடிதம் வெளிவந்தது. அதைத் திறக்காமலே அவன், மேலே இருந்த விலாசத்தை வெகு நேரம் பார்த்தவாறு இருந்தான். கடிதத்தினுள் விஷயம் அதிகமாக இராது என்று அவனுக்குத் தெரியும். தன் மனத்தில் உள்ளதை வெளிப்படையாக ஆசாவுக்கு எழுதத் தெரியுமா என்பது சந்தேகம். பழக்கமற்ற கையெழுத்தில் கோணல் மாணலாக அவள் எழுதுவதிலிருந்து அவளுடைய பூவினும்

மென்மையான உள்ளத்தின் மொழியை கற்பனை செய்து கொள்ளத்தான் வேண்டும். மிகவும் முயன்று ஆசா எழுதிய விலாசத்தைப் படிக்கும்போது தன் பெயரே ஓர் இன்னிசை போல் அவன் காதில் ஒலித்தது. பதிவிரதையான பெண் உள்ளத்தின் ஆழ்ந்த புரையிலிருந்து வெளிப்பட்ட தூய காதல் கீதம் அது!

இரண்டு நாள் பிரிவில் மகேந்திரனுடைய மனம் நீண்ட காலத் தொடர்பினால் உண்டான சோர்வை உதறியது. பேதையின் புதுக் காதலில் மலர்ந்த இன்ப நினைவுகள் மீண்டும் புத்தொளி பெற்றன. கடைசிச் சில நாட்கள் அன்றாடக் குடும்ப அலுவல்களில் ஏற்பட்ட அசௌகரியங்கள் அவனுக்கு எரிச்சலூட்டின. அந்த எரிச்சல் விலகியது. எல்லையற்ற ஒரு களிப்பின் கொழுந்தென ஆசாவின் உருவம் அவனுடைய மனத்தினுள் உயிர்பெற்று எழுந்தது.

மகேந்திரன் நிதானமாக உறையைப் பிரித்துக் கடிதத்தை எடுத்து நெற்றியிலும் கன்னங்களிலும் தடவிக்கொண்டான். முன்பு ஆசாவுக்குப் பரிசாக அளித்த வாசனை அத்தரின் மணம் கடிதத்திலிருந்து பெருமூச்சுப்போல் அவன் உள்ளத்தினுள் புகுந்தது.

அவன் கடிதத்தைப் படித்தான். ஆனால் அங்கு அவன் கண்டது என்ன? கோணல் எழுத்துக்கள்தான்; ஆனால் அந்த எழுத்தின் அர்த்தமோ!...எழுத்துக்குத் தக்கபடி அமைய வில்லை, அந்த மொழியின் பொருள்!

''காதலரே! யாரை மறக்கவேண்டும் என்று போனீர் களோ, அவளைப்பற்றி ஏன் நான் நினைவூட்ட வேண்டும்! நீங்களாக அறுத்து எறிந்த கொடி மானத்தைவிட்டுத் தழுவி ஏற முயலுமா! அது ஏன் மண்ணோடு மண்ணாக மட்கிவிடக் கூடாது! ஆனால் இதனால் உங்களுக்கு என்ன நஷ்டம், ஸ்வாமி! கணநேரம் நினைவு வந்தால்தான் என்ன! அதனால் என்ன தான் கெட்டுவிடும்! நீங்கள் என்னை அவமதித்தது முள்ளைப் போல் என் மார்பைத் துளைத்தது; அல்லும் பகலும், வேலை யிலும் ஓய்விலும், என் சிந்தையைவிட்டு அகலாமல் என்னைத் துளைக்கிறது. நீங்கள் மறந்தாற்போல் நானும் மறந்துவிட வழி ஒன்று கூறுங்கள்.

''ஸ்வாமி! நீங்கள் என்னைக் காதலித்தது என் தவறு! கனவிலும் இத்தகைய அதிருஷ்டத்தை நான் எதிர்பார்த்திருப் பேனா! நான் எங்கிருந்து வந்தவள் என்று யாருக்குத் தெரியும்! என்னைக் காண விரும்பாமல், உங்கள் வீட்டில் சம்பளம் பெறாத வேலையாளாக இருந்தபோது உங்கள்மேல் ஏதாவது குறை கூற முடிந்ததா? நீங்கள் என்னிடம் என்ன குணத்தைக்

கண்டு மயங்கினீர்களோ; எதைக் கண்டு என்னை இவ்வளவு உயர்த்திவிட்டீர்கள்! இன்றோ மேகம் இராமலேயே இடி விழுந்துவிட்டது. அது ஏன் எரிச்சல் மூட்டிச் சென்றது? உள்ளம், உடல் எல்லாவற்றையும் ஏன் சாம்பலாக்கவில்லை?

"இந்த இரண்டு நாட்களாக எவ்வளவோ பொறுத்தேன். யோசனை செய்தும் பார்த்தேன். ஆனால் ஒன்றுமட்டும் எனக்கு விளங்கவில்லை. வீட்டில் இருந்தவாறே என்னை விலக்க முடியவில்லையா? எனக்காக வீட்டை விட்டுப் போகும்படியான அவசியம் என்ன? உங்களை அவ்வளவு தூரம் வசப்படுத்தி விட்டேனா நான்! உங்கள் வீட்டின் ஒரு மூலையில், உங்கள் வாயிலுக்கு வெளியே தள்ளி வைத்தால் உங்கள் கண்ணில் படுவேனா? அப்படியென்றால், ஏன் நீங்கள் போகவேண்டும்? எனக்குப் போக்கிடம் இல்லையா? மிதந்து வந்தவள் அப்படியே போகிறேன்."

இதென்ன கடிதம்! - இது எவருடைய மொழி என்று அவனுக்கு நன்கு புரிந்தது. எதிர்பாராமல் தாக்குண்டு மயங்கியவன்போல் கடிதத்தைக் கையில் பிடித்தவாறு திகைத்துப்போய் உட்கார்ந்திருந்தான் அவன். ஒரு வழியே அவனுடைய மனம் வெகு தீவிரமாகச் சென்றுகொண்டிருந்த போது, அதே வழியில் எதிர்ப் புறமாக ஒரு தாக்குதல்: இதனால் அவனுடைய மனம் தடம் புரண்டு சிதைந்து சுக்கு நூறாகிக் கிடந்தது.

வெகு நேரம் அவன் யோசனையில் ஆழ்ந்திருந்தபின் மீண்டும் இரண்டு தடவை கடிதத்தைப் படித்தான். சிறிது நேரம் தொலை நினைவுகளாக இருந்தவை வரவரப் பளிச் சென்று தோன்றலாயின. வாழ்வின் வானத்தில் ஒரு மூலையில் நிழல்போலத் தோன்றிய வால் நட்சத்திரம் இப்போது தீச் சுடர் போன்ற வாலுடன் வெளிச்சமாகத் தெரியலாயிற்று.

இது விநோதினியின் கடிதந்தான். அப்பாவிப் பெண் ஆசா, அதைத் தன் மனத்தில் தோன்றியதாக எண்ணி எழுதியிருக்கிறாள். முன்பு அவள் இவ்வாறெல்லாம் எண்ணவே இல்லை. விநோதினி சொன்னபடி கடிதம் எழுதும்போதுதான் இவை யாவும் அவள் மனத்தில் எழுந்தன. பிறரைப் பார்த்து எழுதிய சொற்கள் அவள் உள்ளத்தினுள் புகுந்து ஊறிப்போய் விட்டன. புதிதாக மூண்ட பிரிவின் துயரை இவ்வாறு அழகுபட எழுத ஆசாவினால் முடியாது. 'என் மனத்தில் உள்ளதை அவள் எப்படிச் சரியாகத் தெரிந்துகொள்ள முடிந்தது? இவ்வளவு அப்பட்டமாக எவ்வாறுதான் சொல்ல முடிந்தது, அவளால்?' என்று ஆசா எண்ணினாள். உயிர்த் தோழியை ஆசா பின்னும் ஆர்வத்துடன் பின் தொடரலானாள்.

ஏனென்றால், உள்ளத்தினுள் குமுறும் வேதனையை எடுத்துச் சொல்லும் எழுத்துவன்மை தோழியிடந்தானே இருக்கிறது! வேறு வழியில்லையே அவளுக்கு!

மகேந்திரன் நாற்காலியை விட்டு எழுந்தான். புருவம் சுளித்தவாறு விநோதினியைக் கடிந்துகொள்ள நினைத்தான். ஆனால் அவனுடைய கோபமோ ஆசாவின் மேலே விழுந்தது. ''என்ன அசட்டுத்தனம் இது! புருஷன் விஷயத்தில் இவ்வளவு அட்டூழியம் செய்வதா!'' என்றவாறு நாற்காலியில் உட்கார்ந்து அதற்கு அத்தாட்சியாக இருந்த கடிதத்தை மீண்டும் படித்தான். படிக்கும்போது அவன் உள்ளத்தினுள் ஒரு களிப்புப் புரையோடியது. ஆசாவின் கடிதமாக எண்ணி அதைப் படிக்க முயன்றான். ஆனால் அந்த வார்த்தைகளின் கோவை ஆசாவை நினைவூட்டவில்லை. இரண்டு மூன்று வரிகள் படித்ததுமே இன்பச் சிலிர்ப்பூட்டும் ஐயம், நுரைத்துப் பொங்கும் சாராயம்போல் மனத்தின் நாற்புறமும் கவியத் தொடங்கியது. மறைந்தும், அதே சமயத்தில் தெளிவாகவும் இருந்தது; தடையிருந்தும் அண்டி நின்றது; நஞ்சாக இருந்தாலும் இனிப்பைத் தந்தது அது! தேடி வந்து மீண்டும் இழந்த காதலின் நினைவு மகேந்திரனை மயக்கத்தில் ஆழ்த்தியது. கையிலோ காலிலோ கத்தியால் வெட்டிக்கொண்டு எப்படியாவது மனத்தை வேறு விஷயத்தில் திருப்பி, தன்னைப் பொசுக்கும் மயக்கத்தை நீக்கவேண்டுமென்று தோன்றியது அவனுக்கு. எதிரே இருந்த மேஜையைப் பலமாகக் குத்தியவாறு அவன் துள்ளி எழுந்தான். ''சனியனைக் கொளுத்திவிடுகிறேன்'' என்று கடிதத்தை விளக்கின் அருகில் கொண்டு சென்றான். கொளுத்தாமல், மீண்டும் ஒரு முறை படித்தான். மறு நாள் வேலையாள் காகிதம் பொசுக்கிய சாம்பலை வெகு நேரம் தட்டிச் சுத்தம் செய்யவேண்டியிருந்தது. ஆனால் அது ஆசாவின் கடிதத்துச் சாம்பல் அல்ல; அவன் பதில் எழுதப் பன்முறை முயன்று தோல்வியுற்றுப் பொசுக்கிய கடிதங்களே அவை!

20

இதற்குள் இன்னும் ஒரு கடிதம் வந்து சேர்ந்தது.

''என் கடிதத்திற்கு நீங்கள் பதில் போடாதது நல்லதாயிற்று. மனத்தில் உள்ளதை எழுத முடியுமா! உங்கள் பதிலை நான் உள்ளத்தினுள் புரிந்துகொண்டேன். பக்தன் கடவுளை அழைக்கிறான். தெய்வம் வாய்ச் சொல்லால் பதில் அளிப்பதில்லை. இந்த ஏழையின் வேண்டுதல் தங்கள் திருவடிகளில் இடம் பெற்றிருக்கும் என்று நம்புகிறேன்.

''ஆனால் பக்தையின் பூஜைக்காகத் தங்கள் தவம் கலைந்தால், அதன் பொருட்டுக் கோபங் கொள்ளவேண்டாம்! என் உள்ளத்தின் இறைவனே! நீங்கள் வரம் அளித்தாலும் சரி, அளிக்காவிட்டாலும் சரி, கண்நோக்கம் அளித்தாலும், அளிக்காவிட்டாலும் சரிதான்; உங்களுக்குத் தெரிகிறதோ இல்லையோ, பக்தைக்குப் பூஜை செய்யாமல் வேறு வழியில்லை: அதனால்தான் இன்று இந்த இரண்டு வரிகளைக் கடிதமாக எழுதுகிறேன். கல்லால் ஆன என் தெய்வமே! நீங்கள் நிலைத்து இருங்கள்!''

மகேந்திரன் அதற்கு மீண்டும் பதில் எழுத உட்கார்ந்தான். ஆனால் ஆசாவுக்கு எழுதுவதற்குப் பதிலாக விநோதினிக்கு எழுதுவதாகவே தோன்றியது அவனுக்கு. ஒளித்து மறைத்து இரு பொருள்பட எழுத அவனுக்கு வன்மை இல்லை. பல கடிதங்கள் எழுதிக் கிழித்தபின் இரவு நெடுநேரங் கழித்து ஏதோ கிறுக்கி உறையினுள் அடைத்து மேலே விலாசம் எழுதும்போது யாரோ பின்னால் சவுக்கால் அடிப்பது போன்ற ஓர் உணர்ச்சி மூண்டது அவனுக்கு. ''மோசக்காரா! உன்னை நம்பும் ஓர் அபலையை இப்படியா வஞ்சிப்பது!'' என்று யாரோ கேட்பதுபோல் இருந்தது அவனுக்கு. அவன் கடிதத்தைச் சுக்கல் சுக்கலாகக் கிழித்தெறிந்தான். மிகுதி இரவை, மேஜையின்மேல் கைகளால் முகத்தை மூடியவாறு கழித்தான்.

மூன்றாவது கடிதமும் வந்தது: ''ஊடல் கொள்ளத் தெரியாதவளுக்குக் காதலின் அருமை என்ன தெரியும்? என் காதலை அவமதிப்பு, அலட்சியம் இவற்றிலிருந்து காப்பாற்ற முடியாவிட்டால், அதை எப்படி உங்களுக்கு அளிப்பேன்?

''உங்கள் மனத்தை நான் சரியாக உணரவில்லையோ என்னவோ! அதனால்தான் இவ்வளவு துணிச்சல்! நீங்கள் துறந்து சென்ற பின்னரும் நானாகவே கடிதம் எழுத முன் வந்தேன். கம்மென்றிருக்கவே என் உள்ளத்தையும் திறந்து காட்டினேன். ஆனால் உங்களை நான் தவறாக மதிப்பிட்டிருந்

தால், அது என் தவறுமட்டுமா? முதலிலிருந்து நடந்தவற்றை எல்லாம் ஒரு முறை மீண்டும் எண்ணிப் பாருங்கள். என்னை அவ்வாறு எண்ண வைத்தது நீங்கள் அல்லவா?

''போனது போகட்டும். அது சரியோ, தவறோ எழுதியதை இனி அழிக்க முடியாது. கொடுத்ததை இனிப் பெற என்னால் ஆகாதே என்பதுதான் என் குறை! சீ! இப்படியும் வெட்கக்கேடு உண்டா, ஒரு பெண்ணுக்கு! ஆனால் காதலிக்கும் பெண் தன் காதலை இவ்வாறு பழித்துக் கூறுவது இயல்புதான் என்றுமட்டும் எண்ணிவிடாதீர்கள். என் கடிதம் வேண்டாமென்றால் சரி; பதில் எழுதாவிட்டால் இதோடு நிறுத்திவிடுகிறேன்.''

இதற்கு மேலும் அவனால் கம்மென்றிருக்க முடியவில்லை. 'வீட்டுக்கு மிகவும் கோபத்துடன்தான் திரும்பவேண்டும். விநோதினி அவளுக்கு அஞ்சித்தான் நான் ஓடிவந்ததாக நினைக்கிறாள். அவளுடைய அகந்தையை அகற்றுவதற்காவது நான் போய்த்தான் ஆகவேண்டும்' என்று எண்ணிக்கொண்டான் மகேந்திரன்.

இந்தச் சமயத்தில் விஹாரி உள்ளே வந்தான். அவனைக் கண்டதும் மகேந்திரனுடைய உள்ளம் இருமடங்கு ஆர்வத்துடன் துள்ளியது. பல காரணங்களால் முன்பு அவனுக்கு விஹாரியின்மேல் ஐயமும் பொறாமையும் இருந்தன. அதனால் அவர்களுடைய நட்பும் சற்று நெகிழ்ந்தே இருந்தது. கடிதத்தைப் படித்த பின்னர் அந்தப் பொறாமையை அகற்றிவிட்டு அவன் மனப்பூர்வமாக விஹாரியை வரவேற்றான். நாற்காலியை விட்டு எழுந்து, அவன் முதுகில் தட்டிக் கையைப் பிடித்து இழுத்து வந்து சோபாவில் உட்காரவைத்தான் மகேந்திரன்.

ஆனால் விஹாரியின் முகமோ வாட்டமுற்றிருந்தது. இதற்குள் விநோதினியைப் பார்க்கப்போய் அங்கிருந்து தாக்குண்டு வந்திருப்பான் என்று மகேந்திரனுக்குத் தோன்றியது. ''விஹாரி! என் வீட்டுப்பக்கம் சென்றிருந்தாயோ?'' என்று அவன் கேட்டான்.

விஹாரி நிதானமாக, ''இப்போது அங்கிருந்துதான் வருகிறேன்'' என்றான்.

விஹாரியின் மனவேதனைக்குத் தான் கற்பனை செய்த காரணத்தை எண்ணி மகேந்திரன் களிப்படைந்தான். 'பாவம், அதிருஷ்டமற்றவன்! பெண்களின் காதலைப் பெற முடியாதவன்!' என்று எண்ணியவாறு மகேந்திரன் மார்பருகே கை வைத்துப் பார்த்தான். அங்கு மூன்று கடிதங்கள் சலசலத்தன.

''வீட்டில் எல்லோரும் நலந்தானே?''

விஹாரி அதற்கு விடை அளிக்கவில்லை. ''வீட்டைத் துறந்து நீ இங்கே இருக்கக் காரணம் என்ன?'' என்று கேட்டான்.

''இப்போதெல்லாம் அடிக்கடி 'இரவு வேலை' இருக்கிறது. வீட்டில் இருந்தால் அசௌகரியம்.''

''இதற்கு முன்பெல்லாங்கூட 'இரவு வேலை' இருந்தது. அப்போதெல்லாம் வீட்டை விட்டு வந்ததே இல்லையே!''

மகேந்திரன் சிரித்தான். ''ஏன், உனக்கு ஏதாவது சந்தேகம் கிளம்பிவிட்டதா?'' என்றான்.

''கேலியல்ல; வா, வீட்டுக்கு.''

வீடு திரும்பத் தயாராகத்தான் இருந்தான் மகேந்திரன். ஆனால் விஹாரியின் வேண்டுகோளைக் கேட்டதும் அவன் வீட்டுக்கு வர அவ்வளவாக ஆர்வம் இல்லாததுபோல் நடித்தான். ''அதென்னடா! இந்த வருஷமெல்லாம் வீணாகி விடுமே!'' என்றான்.

''இதோ பார், மகேன்! உன்னைச் சின்ன வயசு முதல் பார்த்து வருகிறேன். என்னை ஏமாற்றப் பார்க்காதே! நீ செய்தது தவறு.''

''நான் யாருக்குத் தவறு செய்தேன், நீதிபதியே?''

விஹாரிக்குக் கோபம் வந்தது. ''இருதயம் இருதயம் என்று பெருமை அடித்துக்கொண்டாயே, இப்போது அது எங்கே?'' என்றான்.

''இப்போது காலேஜ் ஆஸ்பத்திரியில் இருக்கிறது.''

''போதுமடா, மகேன், நிறுத்து! இங்கே என்னுடன் நீ கேலியாகப் பேசுகிறாய். அங்கே ஆசா உன் வீட்டில் உள்ளும் புறமும் அழுதுகொண்டு வளைய வருகிறாள்.''

ஆசா துயரத்தில் ஆழ்ந்திருக்கும் செய்தி மகேந்திரனுடைய உள்ளத்தைத் தாக்கியது. உலகத்தில் வேறு எவருக்கும் சுகதுக்கம் என்ற உணர்ச்சி இருப்பதாகவே அப்போது அவனுக்கு இருந்த மயக்கத்தில் தோன்றவில்லை. திடீரென்று திகைத்துப் போய் அவன், ''ஆசா ஏன் அழுகிறாள்?'' என்று கேட்டான்.

விஹாரிக்கு வெறுப்புத் தட்டியது. ''அது உனக்குத் தெரியாது; எனக்குத் தெரியும்'' என்றான்.

''நான் எல்லாம் அறிந்தவன் அல்ல. அதற்காக என்மேல் ஏன் கோபப்படுகிறாய்! என்னைப் படைத்தவன் மீதல்லவா உனக்குக் கோபம் வரவேண்டும்!''

விஹாரியின் ஆத்திரம் மகேந்திரனுக்கு வியப்பைத் தந்தது. விஹாரிக்கு இருதயம் என்று ஒன்று இல்லை என அவன் எண்ணியிருந்தான். 'இத்தனை பரிவு எங்கிருந்து அவ

னுக்கு வந்தது? விவாகம் ஆகாத கன்னிப் பெண் ஆசாவைக் கண்டது முதலாகவே இந்த மாறுதலா? பாவம், விஹாரி!' - இவ்வாறு எண்ணும்போது மகேந்திரன் வருந்தவில்லை. அது அவனுக்கு வேடிக்கையாகவே இருந்தது. ஆசாவின் மனம் எந்தப் பக்கம் செல்கிறதென்று அவனுக்கு நன்ருகத் தெரியும். 'பிறர் வேண்டியும் கிடைக்காத செல்வம், தானுகவே வந்து என்னை அடைகிறது' என்று அவன் தனக்குள் பெருமைப் பட்டுக்கொண்டான்.

''சரி, வா; போகலாம். ஒரு வண்டியைக் கூப்பிடு'' என்ருன் மகேந்திரன்.

21

மகேந்திரன் உள்ளே வந்ததும், அவனுடைய முகத்தைக் கண்ட ஆசாவின் மனத்தில் இருந்த ஐயம் யாவும் கணநேரத்தில் பனிபோல் மறைந்தன. தான் எழுதிய கடிதத்தைப்பற்றி எண்ணம் வரவே, அவளால் அவன் எதிரே தலை தூக்கவும் முடியவில்லை. மகேந்திரன் வேறு அவளைக் கடிந்து கொண்டான். ''இவ்வளவு பழிகளை என்மேல் எப்படித்தான் சுமத்தி எழுதினுயோ?'' என்று அவள் எழுதிய கடிதங்கள் மூன்றையும் சட்டைப் பையிலிருந்து எடுத்தான். ஆசா பரபரப்புடன், ''உங்கள் காலில் விழுகிறேன். அந்தக் கடிதங்களைக் கிழித்து விடுங்களேன்'' என்று அவனுடைய கையிலிருந்து அவற்றைப் பிடுங்க முயன்ருள். மகேந்திரன் அவளைத் தடுத்து நிறுத்திக் கடிதங்களைத் தன் சட்டைப் பையில் வைத்துக் கூறினுன்: ''நான் கடமையின் பொருட்டாகச் சென்றேன். என் கருத்து உனக்குப் புரியவில்லையா! என்னையா சந்தேகித்தாய்?''

ஆசாவின் விழிகளில் நீர் துளித்தது. ''என்னை இந்த முறை மன்னித்து விடுங்கள். இனி இப்படி நடக்காது'' என்ருள்.

''நிச்சயமாகவா?''

''நிச்சயமாகத்தான்.''

மகேந்திரன் அவளை அருகில் இழுத்து அணைத்து முத்தமிட்டான். ''கடிதங்களைக் கொடுங்கள். கிழித்து விடுகிறேன்'' என்ருள் ஆசா.

''வேண்டாம்; இருக்கட்டும்.''

'எனக்கு இடும் தண்டனையாகத்தான் இவற்றை வைத்துக் கொண்டிருக்கிறார்' என்று நினைத்தாள் ஆசா.

இந்தக் கடிதங்கள் விஷயமாக ஆசாவுக்கு விநோதினி யின்மேல் சற்றுக் கோபம். கணவன் வந்த சந்தோஷச் செய்தியைத் தோழியிடம் தெரிவிக்க அவள் போகவில்லை. அவளை ஒதுக்கியே சென்றாள். விநோதினியும் அதைக் கண்ணுற்று,. வேலையைச் சாக்கிட்டு ஒரேயடியாக விலகினாள்.

'இதென்ன, விந்தை! விநோதினியைப் புதுமையாகக் காணலாம் என்று எண்ணினேன். எதிரிடையாக இருக் கிறதே! அந்தக் கடிதங்களின் பொருள்தான் என்ன?' - இவ் வாறு எண்ணமிட்டது மகேந்திரனுடைய மனம்.

பெண் உள்ளத்தின் புதிரை விடுவிக்க இனி முயலுவ தில்லை என்று மகேந்திரன் உறுதி பூண்டிருந்தான். 'விநோ தினி அண்டி வந்தாலும் நான் விலகியே செல்வேன்' என்று அவன் திடமாக இருந்தான். 'இது சரியாக இல்லையே! நடக்கக் கூடாதது ஒன்று நடந்தாற்போல் இருக்கிறதே! விநோதினி யுடன் சாதாரணமாகக் கேலிப் பேச்சுக்கள் பேசிச் சந்தேகச் சூழ்நிலையை அகற்ற வேண்டும்' என்று அவன் தனக்குள் ஒரு தீர்மானத்துக்கு வந்தான்.

அவன் ஆசாவிடம், ''ஏது! உன் தோழிக்கு நானே வேண் டாதவனாக ஆகிவிட்டேன் போல் இருக்கிறதே! இப்போ தெல்லாம் அவள் தரிசனமே கிடைப்பது அரிதாக இருக் கிறதே!'' என்றான்.

ஆசா அலட்சியமாக, ''அவளுக்கு என்னவோ, யாருக்குத் தெரியும்!'' என்று பதில் அளித்தாள்.

ராஜலட்சுமி மீண்டும் கண்ணீரும் கம்பலையுமாக வந்து நின்றாள்; ''விபினனின் பெண்டாட்டி ஊருக்குப் போகிறா ளாம்!'' என்றாள்.

மகேந்திரன் திகைப்பைச் சமாளித்து, ''ஏன், அம்மா?'' என்றான்.

''என்னவோ, அப்பா! இந்தத் தடவை ஊருக்குப் போகிறேன் என்று ஒற்றைக்காலில் நிற்கிறாள். எவரையும் கௌரவமாக நடத்த உனக்குத் தெரியாது. பிறத்தியார் வீட்டுப் பெண்! அவளை வீட்டு மனுஷிபோல் கௌரவித்துப் பாராட்டாவிட்டால் எப்படி அவள் இங்கே இருப்பாள்?''

விநோதினி தன் படுக்கையறையில் படுக்கை உறை தைத்துக்கொண் டிருந்தாள். மகேந்திரன், ''விநோதினி!'' என்று அழைத்தபடி உள்ளே நுழைந்தான்.

விநோதினி நேராக உட்கார்ந்து, ''என்ன, மகேந்திர பாபு!'' என்றாள்.

''நாசமாய்ப் போயிற்று! மகேந்திரன் எப்போது பாபு வானுன்!''

விநோதினி தையலிலிருந்து கண்ணை எடுக்காமல், ''பின், எப்படிக் கூப்பிடுவது?'' என்ருள்.

''உன் தோழியைக் கூப்பிடவில்லையா, அப்படித்தான்.''

மற்றச் சமயங்களில் போல், அன்று விநோதினி கேலியாகப் பதில் அளிக்கவில்லை. தன் கைவேலையிலேயே அவள் கருத்தாக இருந்தாள்.

''அது நிஜமான உறவாகி விட்டதாக்கும்! அதனுல்தான் இன்று அது கேலியாகப் படவில்லை'' என்ருன் மகேந்திரன்.

விநோதினி தன் வேலையைச் சற்று நிறுத்தி ஒரு மூலையில் அதிகப்படியாக இருந்த நூலைப் பல்லினுல் கடித்தெறிந்தாள். ''எனக்கென்ன தெரியும்? உங்களுக்குத்தானே அது தெரியும்!'' என்றதும் உடனே மேற்கொண்டு பேச்சை வளர்த்தாமல் திருப்பினுள். ''திடீரென்று காலேஜிலிருந்து வந்துவிட்டீர்களே!'' என்ருள்.

''பிணத்தை அறுப்புதைத்தான் எத்தனை நாளைக்குச் செய்ய முடியுமாம்!''

விநோதினி மீண்டும் பல்லினுல் நூலைக் கடித்து அறுத்துக் கொண்டே, ''இப்போது உயிருள்ள ஒன்று தேவைப் படுகிறதா ?'' என்ருள்.

விநோதினியுடன் சாதாரணமாகக் கேலிப் பேச்சுக்கள் பேசிப் பழையபடி பொழுதுபோக்க வேண்டுமென்ற உறுதியுடன் இருந்தான் மகேந்திரன். ஆனுல் இப்படி அழுத்தமாக அவள் இருப்பது கண்டு சாதாரணமாகப் பேச எவ்வளவோ முயன்றும் அவனுல் முடியவில்லை. விநோதினி இவ்வாறு தொலைவில் ஒதுங்குவது கண்டு மகேந்திரனுடைய உள்ளமும் அவள் பின்னுலேயே ஓடியது. இடையே இருந்த தடையை எவ்வாருகிலும் அடியோடு ஒழிக்க அவன் விரும்பினுன். விநோதினி கடைசியாக எய்த சொல்லம்புக்கு எதிராகக் கணை எய்யாமல் அவன் அவளருகில் வந்து உட்கார்ந்தான். ''எங்களை விட்டுச் செல்லக் காரணம் என்ன ? ஏதாவது தவறு செய்தேனு ?'' என்ருன்.

விநோதினி சற்று நகர்ந்து தையல் வேலையிலிருந்து தலை நிமிர்ந்தாள். அவளுடைய மதர்த்த விழிகள் மகேந்திரனைக் கூர்ந்து நோக்கின. ''கடமை என்று எல்லாருக்கும் ஒன்று இருக்கிறதல்லவா! நீங்கள் எல்லாவற்றையும் விட்டு மாணவர் விடுதிக்குச் சென்றது எவராவது செய்த குற்றம் காரணமாகவா ? நானுந்தான் போகவேண்டும், எனக்கும் கடமைகள் இல்லையா?'' என்ருள் அவள்.

இதற்கு ஏற்ற மறுமொழி கூற அவனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. சற்று நேரம் பொறுத்து அவன், ''போகா விட்டால் நடக்காது என்று சொல்லும்படி அப்படி என்ன கடமைகளோ உனக்கு!'' என்ருன்.

விநோதினி கவனமாக ஊசியின் காதிலே நூலைச் செலுத்தியவாறு, ''கடமை இருக்கிறதா, இல்லையா என்று என் மனசுக்குத்தான் தெரியும். உங்களுக்கு அந்தப் பட்டியலை என்னவென்று சொல்வது?'' என்ருள்.

மகேந்திரன் ஆழ்ந்த யோசனையுடன் தொலைவில் தெரிந்த தென்னை மரத்தையே சாளரத்தின்மூலம் பார்த்தவாறு கொஞ்ச நேரம் நின்ருன். விநோதினி வாய் திறவாமல் தையல் வேலையில் ஆழ்ந்தாள். ஊசி விழுந்தால்கூடக் கேட்கும்படியான அமைதி அறையினுள் நிலவியது! வெகுநேரம் சென்றபின் சட்டென்று பேசினுன் மகேந்திரன். எதிர்பாராமல் மோனம் கலையவும், விநோதினி திடுக்கிட்டாள். அவளுடைய விரலில் ஊசி தைத்தது.

''எவ்வளவு கெஞ்சினுலும், வேண்டினுலும் நீ தங்க மாட்டாய்!'' என்ருன் மகேந்திரன்.

கையில் துளித்த ரத்தத்தை உறிஞ்சினுள் விநோதினி. ''ஏன், இந்தக் கெஞ்சலும் வேண்டுதலும் எதற்கு? நான் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி இரண்டும் ஒன்று தான். உங்களுக்கு அதனுல் ஒன்றும் வந்துவிடப் போவ தில்லை.''—இவ்வாறு சொல்லும்போது விநோதினியின் குரல் கம்மியது. நன்ருகத் தலை குனிந்து தைப்பதில் முழுக் கவனத்தையும் செலுத்தினுள் அவள். அவளுடைய விழிகளின் ஓரத்தில் கண்ணீர் தேங்குவதுபோல் தோன்றியது. மாசி மாதப் பிற்பகல் மாலையாக மங்கி வந்தது.

கணப்பொழுதில் மகேந்திரன் விநோதினியின் கைகளைப் பிடித்துக்கொண்டு கண்ணீர் தொண்டையை அடைக்க, ''எனக்கு அதில் அக்கறை இருப்பதாக வைத்துக்கொள். அப்படியென்ருல் தங்குவாயா?'' என்று கேட்டான்.

விநோதினி பரபரப்புடன் கையை விடுவித்துக்கொண்டு நகர்ந்தாள். மகேந்திரனுடைய திகைப்பும் அகன்றது. தான் சொன்ன சொல்லே அவனுடைய காதில் கேலிப் பேச்சாக எதிரொலித்தது. குற்றம் புரிந்த நாக்கை அவன் பற்களால் கடித்துக்கொண்டான். அதற்கப்புறம் அவன் வாயே திறக்க வில்லை.

இந்த வேளையில் மோனம் சூழ்ந்த அந்த அறையினுள் ஆசா நுழைந்தாள். விநோதினி உடனே முன் பேசிய பேச்சின் தொடர்ச்சியாகச் சிரிப்புடன் மகேந்திரனை நோக்கிச்

சொன்னாள்: ''எனக்கு இத்தனை மதிப்புத் தருகிறீர்கள். ஆகவே, உங்கள் வார்த்தையைக் கேட்பது என் கடமை. நீங்களாக விடை கொடுக்கும்வரையில் நான் இருக்கிறேன்.''

கணவனுடைய முயற்சி பலித்தது கண்டு மலர்ச்சியுடன் ஆசா தோழியைத் தழுவிக்கொண்டாள். ''இதேதான் கடைசிப் பேச்சு. சரி, மூன்று தடவை சொல்; நாங்களாக விடை கொடுக்கும் வரையில், 'கிளம்பமாட்டேன், மாட்டேன், மாட்டேன்' என்று சொல்'' என்றான். அவ்வாறே விநோதினியும் மும்முறை கூறினாள். ''அடி தோழி! இருக்கத்தான் இருக்கிறாயே, அதற்கு இவ்வளவு தூரம் வேண்ட வேண்டுமா! கடைசியில் என் புருஷரிடம் தோற்றுவிட்டாயே!'' என்றாள் ஆசா.

விநோதினி சிரித்தாள். ''நான் தோற்றுவிட்டேனா, உங்களைத் தோற்கடித்தேனா, சொல்லுங்கள்'' என்று அவள் மகேந்திரனைக் கேட்டாள்.

இவ்வளவு நேரமாக மகேந்திரன் திகைத்து நின்றிருந்தான். தன் தவறுதலே வீடெங்கும் நிறைந்திருப்பது போலவும், தன்னைச் சுற்றிக் கஷ்டமே சூழ்ந்திருப்பது போலவும் தோன்றியது அவனுக்கு. ஆசாவுடன் முகமலர்ந்து சகஜமாகப் பேசுவது எப்படி முடியும்! கணநேரத்தில் தான் செய்த பயங்கரமான தவறுதலை எப்படிச் சிரிப்பினால் மழுப்ப முடியும்! அத்தகைய மாயவித்தை அவனுக்குத் தெரியாது. அவன் நிதானமாக, ''நான்தான் தோல்வி அடைந்தவன்'' என்றதும் அறையிலிருந்து வெளியே சென்றான்.

சற்று நேரத்துக்கெல்லாம் அவன் மீண்டும் அறையினுள் நுழைந்து, ''என்னை மன்னித்துவிடு'' என்றான்.

''நீங்கள் செய்த தவறு என்ன?'' என்றாள் விநோதினி.

''உன்னைப் பலவந்தமாக நிறுத்திவைக்கும் உரிமை எங்களுக்கு இல்லை.''

விநோதினி சிரித்தாள். ''நீங்கள் பலவந்தம் செய்ததாக எனக்குத் தோன்றவில்லை. என்மேல் பரிவுகொண்டு நல்லதனமாகச் சொன்னீர்கள். அதைப் பலவந்தம் என்று சொல்லலாமா? நீயே சொல்லேன், ஆசா; வலுவும் பரிவும் ஒன்றாகுமா?'' என்றாள்.

''ஒருகாலும் ஆகாது'' என்று ஆசா முழு மனத்துடன் விநோதினிக்கு ஒத்துப் பாடினாள்.

''நான் தங்கவேண்டுமென்பது உங்கள் ஆசை. நான் போனால் உங்கள் மனம் நோகும். இது என் அதிருஷ்டமென்றே கருதுகிறேன். ஆசா, நீ என்ன சொல்லுகிறாய்! உலகத்தில் இப்படி ஒரு தோழர் கிடைப்பாரா? வருந்தும்

போதும், களிக்கும்போதும் கூடவே உறுதுணையாக இருப் அதிருஷ்டவசமாகக் கிடைத்தால், அவரைத் துறந்து செல்ல நான் ஏன் ஆத்திரப்படவேண்டும்?''

தன் புருஷன் குன்றிப்போய்ப் பதில் அளிக்காமல் நிற்பது ஆசாவுக்குச் சற்று வேதனை தந்தது. ''உன்னுடன் பேச யாரால் ஆகும்! என் புருஷர்தான் தோல்வியை ஒப்புக் கொண்டு விட்டாரே! போதும், உன் பேச்சு! கொஞ்சம் நிறுத்திக்கொள்'' என்றாள் அவள்.

மகேந்திரன் மறுபடியும் விரைவாக வெளியே சென்றான். அப்போது ராஜலட்சுமியுடன் சற்று உரையாடிக்கொண் டிருந்துவிட்டு விஹாரி மகேந்திரனைத் தேடி வந்தான். கத வருகில் அவனைக் கண்டதும் மகேந்திரன், ''அப்பா விஹாரி, என்னைப்போல வஞ்சகன் உலகத்தில் கிடையாது!'' என்றான். அவன் குரலில் தொனித்த தீவிரம் அறையிலும் ஒலித்தது.

உள்ளிருந்து அழைப்பு வந்தது: ''விஹாரி பாபு!''

''கொஞ்சம் பொறுத்து வருகிறேன், விநோதினி மன்னி!'' என்றான் விஹாரி.

''கொஞ்சம் கேட்டுவிட்டுத்தான் போங்களேன்'' என்றாள் விநோதினி.

விஹாரி உள்ளே நுழைந்ததுமே ஆசாவின் பக்கம் ஒரு கணம் பார்த்துக்கொண்டான். முக்காட்டில் ஆசாவின் முகம் ஓரளவு தெரிந்தது. அங்கு வேதனையோ கவலையோ எதன் அடையாளமும் தென்படவில்லை. ஆசா எழுந்து செல்ல முயன்றபோது, விநோதினி அவளைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள்; ''அது சரி, விஹாரி பாபு! உங்களுக்கும் ஆசா வுக்கும் இடையே என்ன? உங்களைக் கண்டதுமே ஏன் ஓட்டம் பிடிக்கிறாள்?'' என்றாள்.

ஆசா கூச்சத்துடன் விநோதினியைத் தட்டினாள்.

விஹாரி சிரித்தான்; ''ஒரு வேளை கடவுள் என்னை அவ் வளவு அழகனாகப் படைக்கவில்லை என்பதனால் இருக்கலாம்'' என்றான்.

''பார்த்தாயாடி! எவ்வளவு தந்திரமாகப் பேசுகிறார்! உன்னைக் குறை சொல்லாமல் பழியைக் கடவுளின்மேல் போடுகிறார். லட்சுமணர்போல் ஒரு குணசாலியான மைத் துனர் கிடைத்தும் அவரைப் போற்றத் தெரியவில்லையே; மிகவும் துரதிருஷ்டசாலியடி நீ!''

''அதைக் கண்டு நீ இரக்கம் கொள்கிறாய் என்றால் நான் வேண்டாம் என்றா சொல்லப் போகிறேன்!''

''பரந்த கடல் கிடந்தபோதிலும், சாதகப் பறவையின் தாகம் மழைத்துளியைப் பருகாமல் தணிகிறதா?''

ஆசா பலவந்தமாகத் தன் கைகளை விடுவித்துக்கொண்டு வெளியே சென்ருள். விஹாரியும் புறப்பட்டான். விநோதினி, ''மகேந்திர பாபுவுக்கு என்ன? உங்களுக்குத் தெரியுமா?'' என்று கேட்டாள்.

இதைக் கேட்டதும் விஹாரி திடுக்கிட்டுத் திரும்பினுன். ''எனக்கு ஒன்றும் தெரியாதே! ஏதாவது நடந்ததா என்ன?'' என்ருன்.

''எனக்கு என்னவோ நல்லதாகப் படவில்லை'' என்ருள் விநோதினி. விஹாரி ஆவலும் கவலையும் தோய்ந்த முகத்துடன் நாற்காலியில் உட்கார்ந்தான்.

விநோதினி விவரமாகச் சொல்லுவாள் என்று ஆவலுடன் அவளுடைய முகத்தையே நோக்கினுன். விநோதினி ஒன்றும் பேசாமல் தையல் வேலையில் கருத்தைச் செலுத்தினுள்.

கொஞ்ச நேரம் காத்திருந்தபின் விஹாரி, ''மகேன் அண்ணு விஷயமாக ஏதாவது கவனித்தாயா?'' என்ருன்.

விநோதினி சகஜமாகப் பதில் சொன்னுள். ''என்னமோ, எனக்கு நல்லதென்று படவில்லை. தோழியைப்பற்றித்தான் எனக்குக் கவலையாக இருக்கிறது'' என்றதும் அவள் பெருமூச்சுடன் சவுக்கத்தைக் கீழே வைத்துவிட்டு எழுந்து செல்லக் கிளம்பினுள்.

விஹாரி பரபரப்புடன், ''உட்காரார், மன்னி!'' என்ருன்.

விநோதினி அறையின் கதவு சாளரங்களை எல்லாம் நன்ருகத் திறந்துவிட்டு, மண்ணெண்ணெய் விளக்கின் திரியைத் தூண்டினுள். பிறகு படுக்கையின் ஓரமாகச் சவுக்கம் பின்ன எடுத்துக்கொண்டு உட்கார்ந்தாள். ''நான் என்னவோ இங்கேயே இருந்துவிட முடியாது. நான் போய்விட்டால் என் தோழியைக் கொஞ்சம் கவனித்துக் கொள்ளுங்கள். அவள் கவலைப்படக் கூடாது'' என்றதும் பொங்கி எழுந்த இதயத்தின் பொருமலை அடக்கத் தன் முகத்தை வேறு புறம் திருப்பிக் கொண்டாள் விநோதினி.

''மன்னி, நீ இருந்தே ஆகவேண்டும். உனக்கோ சொந்த மனிதர் என்று சொல்லிக்கொள்ள யாருமில்லை. இந்த அப்பாவிப் பெண்ணைச் சுகதுக்கங்களில் காப்பாற்றும் பொறுப்பை நீ ஏற்றுக்கொள். நீ இவளை விட்டுப்போனுல், எனக்கும் வேறு வழி எதுவும் தெரியவில்லையே!'' என்ருன் விஹாரி.

''உங்களுக்கு உலகத்தின் போக்கு நன்ருகத் தெரியும். இங்கேயே எப்போதும் இருப்பது முடியுமா! நாலுபேர் என்ன சொல்லுவார்கள்!''

''ஊரார் என்ன வேண்டுமானுலும் சொல்லிக் கொள்ளட்

டுமே! நீ அதைக் காதில் போட்டுக்கொள்ளாதே! நீ தெய்வப் பிறவி. இந்த அபலையை உலகத்தின் கடுமையான தாக்குதல்களிலிருந்து காப்பாற்றுவது உனக்கு ஏற்ற காரியம். நானுங்கூட முதலில் குறுகிய மனம் படைத்த அற்பர்களைப்போல் உன்னைப்பற்றித் தவறான எண்ணம் கொண்டிருந்தவன்தான். ஒரு தடவை ஆசாவின் சுகவாழ்வைக் கண்டு உனக்குப் பொறாமை என்றுகூட எண்ணியவன்தான். இன்னும்...கிடக்கிறது அதையெல்லாம் எடுத்துச் சொல்லுவதுங்கூடப் பாவம். அப்புறந்தான் உன் உள்ளத்தின் பெருந்தன்மையை என்னால் உணர முடிந்தது; உன்னிடம் எனக்கு இன்று அதிகமாகப் பக்தி பிறந்திருக்கிறது. அதனால்தான் என் குற்றங்களை வெளிப்படையாகக் கூறாமல் இருக்க என்னால் முடியவில்லை.''

விநோதினிக்கு மெய் சிலிர்ப்பு எழுந்தது. இதெல்லாம் அவள் நடிப்புத்தான் என்றாலும், விஹாரி பணிவுடன் அளித்த அந்தக் கௌரவத்தைப் பொய்யென்று தள்ள அவளால் முடியவில்லை. இவ்வாறு அவளுக்கு எவரும் பெருமை தர முன்வந்ததில்லை. ஒரு கணம் உண்மையாகவே தான் தூய்மையும் உயர்வும் பெற்றவளென்றுகூட அவளுக்குத் தோன்றியது. ஆசாவின்மேல் ஒரு பரிவு மூண்டு அவள் கண்களில் நீரும் வடிந்தது. அதை அவள் மறைக்கவில்லை. அந்தக் கண்ணீர்ப் பெருக்கு, 'நாம் உயர்வை எய்திவிட்டோம்' என்ற மயக்கத்தை அவளுக்குத் தந்தது.

விநோதினியின் கண்களில் உதிரும் நீர் முத்துக்களைக் கண்ட விஹாரி தன் கண்ணீரை அடக்கிக்கொள்ள மகேந்திரனின் அறைக்குச் சென்றான். மகேந்திரன் திடீரென்று, 'நான் வஞ்சகன்' என்று சொல்லிக்கொள்ளக் காரணம் என்ன? விஹாரிக்கு அதன் பொருள் விளங்கவில்லை. அறைக்குள் மகேந்திரன் இல்லை. அவன் வெளியே உலாவச் சென்றுவிட்டதாக வேலையாள் தெரிவித்தான். முன்பெல்லாம் அவசியம் இராவிட்டால் மகேந்திரன் வெளியே கிளம்பவே மாட்டான். பழக்கமான மனிதர், பழகிய வீடு இவற்றுக்கு வெளியே எதுவும் அவனுக்குப் பிடிக்காது. அவை அவனுக்குச் சோர்வையும் எரிச்சலையுமே தரும். விஹாரி தீவிரமாக யோசனை செய்தவாறு மெல்லத் தன் வீட்டுக்குச் சென்றான்.

விநோதினி ஆசாவைத் தன் படுக்கை அறைக்கு அழைத்து வந்து கண்ணீர் ததும்ப அவளை அணைத்துக்கொண்டு, ''அடி! நான் மிகவும் துரதிருஷ்டசாலி! முற்றும் அவலட்சணமானவள்'' என்றாள். ஆசா வேதனையுடன் அவளைக் கைகளால் தழுவி, ''ஏன் அப்படிச் சொல்கிறாய்?'' என்றபோது அவள் குரலில் பாசம் ததும்பியது.

விநோதினி ஆசாவின் மார்பில் முகம் புதைத்துக் குழந்தைபோல் விம்மி, ''நான் போகும் இடங்களில் எல்லாம் கெட்டதாகவே முடிகிறது. என்னை விட்டுவிடடி! எங்காவது காட்டுக்கு ஓடிவிடுகிறேன்'' என்றாள்.

ஆசா, விநோதினியின் மோவாயைத் தொட்டு அவள் முகத்தை நிமிர்த்தினாள். என் கண்ணே இல்லையோ? அப்படியெல்லாம் பேசாதே! உன்னைப் பிரிந்து என்னால் இருக்க முடியாது. என்னை விட்டுச் செல்லும் எண்ணம் உனக்கு இன்று வரக் காரணம் என்ன?'' என்றாள்.

மகேந்திரனைக் காணமல் விஹாரி மீண்டும் ஏதாவது சாக்கிட்டு விநோதினியின் அறைக்கு வந்தான்; மகேந்திரன், ஆசா இவர்களுக்கு இடையே உண்டான சிக்கலைப்பற்றிச் சற்றுத் தெளிவாகக் கேட்கவேண்டுமென்றே அங்கு வந்தான்.

மறு நாள் காலை மகேந்திரனைத் தன் வீட்டுக்குச் சாப்பிட வரச் சொல்லும்படி விநோதினியைக் கேட்கும் வியாஜமாக அவன் அங்கே வந்தான். ''விநோத் மன்னி!'' என்று அழைத்தவன் மண்ணெண்ணெய் விளக்கின் ஒளியில் கண்ணீரும் கம்பலையுமாகத் தழுவிக்கொண்டு நிற்கும் தோழியரைக் கண்டதும் திகைத்து நின்றான். 'விஹாரி ஏதாவது விநோதினியைப் பழித்திருப்பார். அதனால்தான் அவள் போகிறேனென்கிறாள்' என்று ஆசாவுக்குத் தோன்றியது. 'விஹாரி பாபு செய்தது மிகவும் அநியாயம். அவர் மனத்தில் நல்லெண்ணமே சிறிதும் இல்லை' என்று நினைத்தவாறு ஆசா வெளியே வந்தாள். அவளுக்கு வெறுப்பாக இருந்தது. விஹாரியும் விநோதினியின்மேல் பின்னும் பக்தியுடன் வெளிவந்தான்.

அன்றிரவு மகேந்திரன் ஆசாவிடம், ''சுனி! நான் நாளைக் காலைப் பாஸஞ்சர் வண்டியில் காசிக்குப் போகிறேன்'' என்றான்.

ஆசாவுக்கு மார்பு திக்கென்றது. ''ஏன்?'' என்று கேட்டாள் அவள்.

''சின்னம்மாவைப் பார்த்து வெகு நாள் ஆகிறது'' என்றான் மகேந்திரன்.

இதைக் கேட்டதும் ஆசாவுக்குக் கூச்சம் மண்டியது. இந்த எண்ணம் அவளுக்கு அல்லவா முதலில் தோன்றியிருக்க வேண்டும்! தன் சுக துக்கங்களில் மூழ்கி அன்புருவமான பெரியம்மாவை அவள் மறந்தாள். மகேந்திரனே ஊரை விட்டுச் சென்ற அந்தத் துறவியை மனத்தில் வைத்துக்கொண்டிருக்கிறான். தான் மிகவும் கல்நெஞ்சம் படைத்தவள் என்றே அவளுக்குத் தோன்றியது.

''என் கையில் அவள் தன் குடும்பத்தின் ஒரே அன்புச்

செல்வத்தைத் தந்துவிட்டுச் சென்றுள். அவளை ஒரு முறை பாராமல் என்னுல் நிம்மதியாக இருக்கவே முடியாது'' என்று சொல்லும்போது மகேந்திரனுக்கு நெஞ்சு அடைத்தது. அன்போடு ஆசியும், நல்வாழ்த்தும் அளிப்பது போல் அவன் கம்மென்று வலது கையினுல் ஆசாவின் தலையையும் நெற்றியையும் மெல்லத் தடவினுன். எதிர்பாராமல் பொங்கிய இந்த அன்புப் பெருக்கின் முழுப்பொருளும் ஆசாவுக்குப் புரியவில்லை. அவள் இருதயம்மட்டும் உருகிக் கண்ணீராக வடிந்தது. அன்று அந்திப் பொழுதில் விநோதினி பரிவாக அவனிடம் சொன்னதும் ஆசாவுக்கு நினைவு வந்தது. இருவரிடையேயும் எங்கேயோ ஏதோ தொடர்பு இருப்பதாகவே அவளுக்குத் தோன்றவில்லை. தன் வாழ்வில் ஏதோ ஒன்றின் அறிகுறிதாம் இவை எல்லாம் என்பதுமட்டும் அவளுக்குத் தெரிந்தது. அந்த மாறுதல் நல்லதோ, கெட்டதோ, யாருக்குத் தெரியும்?

அச்சமும் வேதனையும் கலந்து அவள் மகேந்திரனை அணைத்துக்கொண்டாள். காரணமின்றி அவள் உள்ளத்தில் எழுந்த பயத்தை மகேந்திரனுல் உணர்ந்துகொள்ள முடிந்தது. ''சுனி! அன்பே உருவான உன் பெரியம்மாவின் ஆசி உனக்கு அளவின்றி இருக்கிறது. உனக்குப் பயமே இல்லை. உனக்கு யாதொரு பயமும் இல்லை. நீ நன்ருக இருக்க வேண்டுமென்றே அவள் எல்லாவற்றையும் துறந்து சென்றுள். உனக்கு எந்தவிதமான தீங்கும் நேராது'' என்றுன் அவன்.

ஆசா உறுதியுடன் தன் அச்சத்தை விலக்கித் தன் கணவனின் ஆசியைக் குறைவற்ற கவசம் என்று ஏற்றுக்கொண்டாள். அவளுடைய உள்ளம் பெரியம்மாவைப் பன்முறை வணங்கிப் பாத தூளியை ஏற்றுக்கொண்டது. 'அம்மா! உன் ஆசி என் புருஷரை என்றென்றும் காப்பாற்றட்டும்' என்று மனப்பூர்வமாக அவள் வேண்டிக் கொண்டாள்.

மறு நாள் மகேந்திரன் விநோதினியிடம் ஒன்றும் சொல்லாமல் கிளம்பிச் சென்றுன். விநோதினி தனக்குள், ''தான் செய்தது தவருக இருக்க என் மேல் என்ன கோபமோ! இத்தகைய நல்ல மனிதரை நான் கண்டதே இல்லை. இதெல்லாம் எத்தனை நாட்கள்தான் நீடிக்கும் பார்க்கலாம்'' என்று சொல்லிக்கொண்டாள்.

22

உலகைத் துறந்து வந்த அன்னபூரணிக்கு மகேந்திரனைக் கண்டதும் களிப்பும் அன்பும் ஒரு புறம் இருக்க, மீண்டும் ஆசாவுக்காகத் தாயுடன் ஏதோ சச்சரவு மூளவே, தன்னிடம் குறை கூறி ஆறுதல் பெற வந்திருக்கிறானோ என்ற பயமும் மற்றொரு பக்கம் மூண்டது. குழந்தைப் பருவமுதலே ஏதாவது சங்கடமோ, கவலையோ மூண்டால் சித்தியிடந்தான் ஓடி வருவான். யார்மீதாவது அவனுக்குக் கோபம் என்றால் அவள் அதைப் போக்குவாள். ஏதாவது மனவருத்தம் என்றால், அதை எளிதில் பொறுத்துக்கொள்ளப் புத்தி கூறுவாள். ஆனால் கல்யாணமான பிறகு மகேந்திரனுடைய வாழ்வில் மூண்ட சிக்கலுக்குப் பரிகாரம் கிடக்கட்டும், ஆறுதல் கூட அவளால் சொல்ல முடியவில்லை. அது விஷயமாக எந்த விதத்தில் சொன்னாலும், வீட்டில் கலகம் இருமடங்காகும் என்று அவளுக்குத் தெரிந்துவிடவே, தானே குடும்பச் சுழலிலிருந்து விலகிக்கொண்டாள். நோயாளிக் குழந்தை தண்ணீர் கேட்டு அழுகிறது: வைத்தியரோ தண்ணீர் தரக் கூடாது என்று பத்தியம் வைத்திருக்கிறார். மனவாட்டத்துடன் தாய் ஒன்றும் செய்ய இயலாமல் வேறு அறைக்குச் சென்று விடுவதில்லையா? அதேபோல் அன்னபூரணியும் ஊரை விட்டுக் கிளம்பிவந்தாள். தொலைவில் தூய்மை வாய்ந்த திவ்வியத் தலத்தில் தெய்வப் பற்றுதலிலும் தினப்படி அநுஷ்டானங்களிலும் மூழ்கி அவள் குடும்பத்தை ஓரளவு மறந்தும் இருந்தாள். அந்தப் பழைய பகைமையை யெல்லாம் கிளப்பி மறைந்து கிடக்கும் புண்ணைக் கிளறிவிடத்தான் மகேந்திரன் வந்திருக்கிறானோ என்று பயந்தாள் அன்னபூரணி.

மகேந்திரன் ஆசாவைப்பற்றியோ, தன் தாயைப் பற்றியோ எந்தவிதமான பேச்சும் எடுக்கவில்லை. ஆகவே, அன்னபூரணியின் கவலை இன்னொரு விதமாகச் சென்றது. 'ஆசாவை விட்டுக் காலேஜுக்கும் போகாத மகேந்திரன் இன்று நம்மைத் தேடிக்கொண்டு காசிக்கு வரக் காரணம் என்ன? ஆசாவின்மேல் அவனுக்கு இருந்த பற்றுதல் தளர்ந்து விட்டதா' என்று எண்ணினாள்.

அவள் கவலையுடன், ''ஏனப்பா, மகேன், சுனி எப்படி இருக்கிறாள்! உண்மையைச் சொல்லவேண்டும். இரா விட்டால் என் தலையைத் தின்றாப்போல்!'' என்றாள்.

''அவள் சுகமாகத்தான் இருக்கிறாள், சின்னம்மா.''

''இப்போதெல்லாம் அவள் என்ன செய்கிறாள்? அப்

படியேதான் குழந்தைகளாக இருக்கிறீர்களா, இல்லை வீட்டு விஷயங்களில் ஏதாவது அக்கறை பிறந்ததா?''

''சிறு பிள்ளைத்தனம் போய்விட்டது. எல்லாவற்றுக்கும் முதல் காரணமான பாடப்புத்தகம் போன சுவடே தெரியவில்லை. நீ இருந்தால் பார்த்து மகிழ்ந்திருக்கலாம். படிப்பை எவ்வளவு தூரம் பெண்கள் அவமதிக்கலாமோ அவ்வளவு தூரம் சுனி மனப்பூர்வமாகக் கடைப்பிடித்துவிட்டாள்.''

''மகேன், விஹாரி என்ன செய்கிறான்?''

''தன் வேலையைத் தவிர வேறு எல்லாம் செய்கிறான். திவானும், குமாஸ்தாவும் வீட்டையும் சொத்தையும் கவனித்துக்கொள்கிறார்கள். எப்படிக் கவனிக்கிறார்களோ எனக்குத் தெரியாது. எப்போதுமே விஹாரி இப்படித்தான். தன் வேலையைப் பிறர் பார்த்துக்கொள்ள இவன் பிறத்தியாருடைய வேலைகளைக் கவனிக்கிறான்''.

''அவன் கல்யாணமே செய்துகொள்ளப் போகிறதில்லையா, மகேன்?''

மகேந்திரன் சற்றுச் சிரித்தான். ''அவன் அது விஷயமாக முயற்சி செய்ததாக எனக்குத் தெரியவில்லை!'' என்றான்.

இதைக் கேட்டதும் அன்னபூரணியின் உள்ளத்தை ஏதோ தாக்கியது. அவளுக்குத் தெரியும்: தன் தங்கை பெண்ணைப் பார்த்தவன் ஆவலுடன் மணம் செய்துகொள்ளத்தான் முன் வந்தான். ஆனால் அந்த ஆவல் எதிர்பாராத விதமாக அநியாயமாகச் சிதைவுற்றது. முன் ஒரு நாள் விஹாரி, ''சின்னம்மா! நீ இனி என்னை விவாகம் செய்துகொள்ள வற்புறுத்தாதே!'' என்றான். அன்று பிணக்குடன் அவன் சொன்னது இப்போதும் அன்னபூரணியின் செவியில் தொனித்தது. அன்புடன் அண்டி நின்ற விஹாரியை மனமுடைந்த நிலையில் விட்டுவிட்டு வந்துவிட்டாள் அவள். ஒரு வித ஆறுதலும் சொல்ல முடியவில்லை, அன்னபூரணியினால். மிகவும் கவலையும் பயமும் மூள அவள், 'இன்னும் ஆசாவின்மேல் விஹாரியின் மனம் ஊன்றியிருக்கிறதோ!' என்று எண்ணினாள்.

மகேந்திரன் கேலியாகவும் சில சமயங்களில் சற்று ஆழ்ந்தும் தங்கள் வீட்டைப்பற்றிய செய்திகள் எல்லாவற்றையும் தெரிவித்தான். ஆனால் விநோதினியின் பெயரைக்கூட எடுக்கவில்லை.

காலேஜ் திறந்திருக்கவே, அவன் அதிக நாட்கள் காசியில் இருக்க முடியாது. ஆனால் நீண்ட காலம் நோய்வாய்ப் பட்டிருந்த பின் ஆரோக்கியமான சூழ்நிலையில் சென்று இருப்பது உடலுக்கு எவ்வளவு தெம்பைத் தருமோ அத்தகைய அமைதி காசியில் அன்னபூரணியிடம் கிட்டியது. ஆகவே,

நாட்கள் தம்பாட்டில் சென்றன. தன்மேலேயே அவனுக்குத் தோன்றியிருந்த கோபம் மெல்ல அகன்றது. தான் உண்டு, தன் பூஜை உண்டு என்றிருந்த அன்னபூரணியின் அன்பு முகத்தெதிரே எப்போதும் இருந்ததால் மகேந்திரனுக்குக் குடும்பத்தின் கடமைகளை ஏற்று நடத்துவது மிகச் சகஜமாகப் பட்டது. அதிலும், ஒரு நிம்மதியைக் காணமுடியவே, முன்பு அதனால் மூண்ட ஓர் அச்சத்தை எண்ணி அவனுக்குச் சிரிப்பாக வந்தது. விநோதினி தனக்கு எம்முறையிலும் இல்லை என்று தோன்றியது. அவளுடைய முகமும் அவனுக்கு மனத்தில் தெளிவாக நினைவு இல்லை. தனக்குள் உறுதியாகவே, ''ஆசாவை என் இதயத்திலிருந்து சிறிதளவும் அகற்றி அங்கு உட்காரக்கூடிய ஆள் எவரும் இல்லை!'' என்று சொல்லிக்கொண்டான்.

''சின்னம்மா, எனக்குக் காலேஜ் படிப்பு வீணாகிறது. நான் வருகிறேன். குடும்பச் சுழலைத் துறந்து இங்கே வந்து விட்டாய் என்றாலும், நடுநடுவே வந்து உன் பாதத்தூளை எடுத்துச் செல்லவாவது அநுமதி கொடு'' என்றான் மகேந்திரன்.

மகேந்திரன் வீட்டுக்கு வந்ததும் ஆசாவிடம் அவள் பெரியம்மா அன்பளிப்பாகத் தந்த குங்குமச் சிமிழ், சலவைக் கல்லால் ஆன செம்பு ஒன்று இரண்டையும் கொடுத்தான். ஆசாவின் விழிகள் அவைகளைப் பெறும்போது நீரை உகுத்தன. பெரியம்மாவின் அன்பும் பொறுமையும், தானும் தன் மாமியாருமாக அவளைப் படாத பாடுகள் செய்ததும் நினைவுவர அவள் உள்ளம் மிகவும் வேதனைப்பட்டது. ''எனக்குப் பெரியம்மாவைப் பார்த்து அவளை வணங்கி மன்னிப்புக் கேட்டுக்கொள்ளவேண்டும் என்றிருக்கிறது. எப்படியாவது அது நடக்குமா?'' என்று அவள் தன் புருஷனைக் கேட்டாள்.

மகேந்திரனுக்கு ஆசாவின் மனவேதனை புரிந்தது. அவள் சில நாட்கள் காசியில் பெரியம்மாவிடம் போய் இருப்பதிலும் அவனுக்குச் சம்மதந்தான். ஆனால் மீண்டும் படிப்பைக் கெடுத்துக்கொண்டு ஆசாவைக் காசிக்கு அழைத்துச் செல்ல அவன் தயங்கினான்.

''பெரியப்பா வீட்டில் இன்னும் கொஞ்சம் நாளில் காசிக்குப் போகிறார்கள்; அவர்களுடன் போனால் தவறில்லையே?'' என்றாள் ஆசா.

மகேந்திரன் ராஜலட்சுமியிடம் சென்று, ''அம்மா, ஆசா சின்னம்மாவைப் பார்க்கக் காசிக்குப் போய்வருகிறேன் என்கிறாள்'' என்றான்.

ராஜலட்சுமி, ''அப்படியென்றால் அவசியம் போகவேண்டியதுதான்! நீயே கொண்டு விட்டு வாயேன், உன் பெண்டாட்டியை!'' என்று குத்தலாகச் சொன்னாள்.

மகேந்திரன் மீண்டும் அன்னபூரணியிடம் செல்லத் தொடங்கியது ராஜலட்சுமிக்குப் பிடிக்கவில்லை. மருமகளும் போகிறுள் என்றதும் உள்ளூறப் பின்னும் வெறுப்படைந்தாள்.

"எனக்குக் காலேஜ் இருக்கிறது, என்ஞல் போகமுடியாது. அவள் தன் பெரியப்பாவுடன் போகிறுள்."

"சரி; பெரியப்பா வீட்டார் பெரிய மனிதர்கள். நம்மைப் போல் ஏழைகளின் நிழலைக்கூட மிதிக்க மாட்டார்கள்! அவர் களுடன் போவது என்ருல் பெருமைப்பட வேண்டிய விஷயந் தானே!"

தாய் இவ்வாறு மேன்மேலும் குத்திச் சொல்வது கேட்டு மகேந்திரனுடைய மனம் கல்லாகியது. அவன் பதில் ஒன்றும் சொல்லாமல் ஆசாவைக் காசிக்கு அனுப்புவது என்ற உறுதி யுடன் சென்ருன்.

விஹாரி ராஜலட்சுமியைப் பார்க்க வந்தபோது அவள், "அடே விஹாரி, என் மருமகள் காசிக்குப் போகிருளாமடா!" என்ருள்.

"என்ன அம்மா திரும்பவும் படிப்பைக் கெடுத்துக் கொண்டு மகேன் அண்ணு காசிக்குப் போகிருஞ!"

"இல்லை, இல்லை! மகேன் ஏன் போகிருன்! அப்படி யிருந்தால் துரைசானியம்மாவுக்கு என்ன மகிமை! மகேன் இங்கே இருப்பான்; அவன் பெண்டாட்டி பெரியப்பாவுடன் போகிருள். எல்லாரும் துரை துரைசானிமார்கள் ஆகிவிட் டார்கள்."

விஹாரியின் உள்ளம் பரபரப்படைந்தது. துரைசானி மார்களைப்பற்றி அல்ல. என்ன நடந்தது? மகேந்திரன் காசிக்குப் போனபோது ஆசா இங்கேதான் இருந்தாள். அவன் திரும்பியதும் ஆசா போகிருள்! அவர்களிடையே என்ன நடந்தது? இப்படி இன்னும் எத்தனை காலம் நடக்கும்! 'நண்பனுக இருக்கும் நான் இதற்கு ஒரு பரிகாரம் செய்ய முடியாதா என்ன? தொலைவிலேயே நிற்கவா வேண்டும்?' என்று எண்ணினுன் அவன்.

தாய் நடந்துகொண்ட விதத்தைப் பார்த்து மனம் குன்றி மகேந்திரன் தன் படுக்கையறையில் உட்கார்ந்திருந்தான். விநோதினி இதற்கிடையே அவனைப் பார்க்கவே இல்லை. ஆசா அவளைப் பக்கத்து அறையிலிருந்து மகேந்திரனிடம் அழைத்து வர மன்ருடிக்கொண் டிருந்தாள்.

இந்தச் சமயம் விஹாரி மகேந்திரனிடம் வந்தான். "ஆசா மன்னி காசிக்குச் செல்வது நிச்சயமாகிவிட்டதா!" என்ருன்.

"ஏன் ஆகாது! தடை என்ன இருக்கிறது?"